473

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௫] தாது—வைகாசி [பரல்-௧௦

## திருவாசகம்

### கோயிற்றிருப்பதிகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் சேனே.

பதவுரை :—

ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே—அழியாது எப்பொழுதும் எங்கும் நிறைந்து அசையாதிருக்கும் நிலையான பேரொளி மலையே

குறைவிலா நிறைவே—யாதொரு குறைவுமின்றி நிறைந்த அறிவுப் பொருளே

கோதிலா அமுதே—துன்பம் சிறிதுங்கலவாத பேரின்பப் பொருளே

சிறைபெறுநீர்போல்—அணைக்கட்டினாற் றடுக்கப்பட்டுத் தேங்கிநின்ற ஆற்று நீரானது அவ்வணைக்கட்டு உடைந்தபொழுது விரைந்து கடலைச்சேர்ந்து அதினினின்றும் மீளாது அக்கடல்நீராய் அடங்கி நிற்றல்போல்

சிந்தைவாய் பாயுந் திருப்பெருந்துறையுறை சிவனே—ஐம்பொறிகள் முதலிய கருவிகளாலாகிய பாச ஞானத்தாற் றடைப்பட்டு ஏக தேசப்பட்டிருந்த எனது உள்ளமானது அப்பாசஞானத்தடை நீங்கியபொழுது சிவத்தினிடம் விரைந்து கலந்து அச்சிவமே

யாய் அடங்கியும் திருப்பெருந்துறையிலும் வீற்றிருந்தருளும் சிவபெருமானே

மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து—வேதாகமங்களாயும் அவ்வேதாகமங்களிற் கூறப்பட்டிருக்கிற முழுமுதற் பொருளாயும் விளங்கி

என் மனத்திடைமன்னிய மன்னே—எனது உள்ளத்தில் நிறைந்த அறிவுப்பொருளாய் நிலைத்து நிற்கிற பொருளே

இறைவனே—என்னை அடிமையாகக்கொண்டு ஆண்டு அருளிய தலைவனே

நீ என் உடல் இடம் கொண்டாய்—எனது உடலையும் (உடலின் கண்ணுள்ள உள்ளத்தையும்) நீ கோயிலாகக்கொண்டு நிலையாக எழுந்தருளியிருக்கும் இருப்பிடமாகக் கொண்டருளினாய்

இனி உன்னை என் இரக்கேன்—(அவ்வாறு நீ என் உடலிலும் உள்ளத்திலும் நிலையாக வீற்றிருந்து 'நான்' 'நீ' என்னும் வேற்றுமையின்றி என்னுடன் அத்துவிதமாய்க் கலந்து பேரின்பம் அளித்து அப் பேரின்பப்பேறு பெற்ற நான்) உன்னிடத்தில் கேட்டுப் பெறவேண்டியது என்ன இருக்கின்றது? (ஒன்றும் இல்லை என்றபடி).

விளக்கவுரை :—

ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே—ஈறு என்பது அழிவு. கொழுமை என்ற அடைமொழியானது ஒளி மிகுதியைக் குறிக்கிறது. கோடி ஞாயிற்றினொளித் தொகுதியும் அவ்வொளிக்கு ஈடாகாது. குன்று என்பது மாறுதலின்றி நிலையாயிருத்தலைக் குறிக்கிறது.

சிறைபெறுநீர்போல்—சிறை என்பது தடை. அது இங்கே ஆற்றுநீரைத் தடைசெய்கிற அணையைக் குறிக்கிறது. சிறைபெறுநீர் என்றதனால் நீர் என்பது ஆற்றுநீர் என்னும் பொருள்பட நின்றது—சிவஞானபோதம் எட்டாவது சூத்திரம் "சிறைசெய்ய நின்ற" என்னும் முதற்குறிப்பு வெண்பாப்பொருளை நோக்குக.

சிந்தைவாய் பாயும் திருப்பெருந்துறை உறை சிவனே—வாய் இங்கே*ஏழாம் வேற்றுமை உருபு. பாயும் என்பது விரைந்து செல்லும் என்ற பொருள்பட நின்றது. அது சிவன் என்னும் பெயர் கொண்டு முடிந்தது.

* சிந்தை வாய் பாயும் சிவன். திருப்பெருந்துறை(யில்) உறை(யும்) சிவன் என முடிக்க.

மறையுமாய் மறையின் பொருளுமாய் என்மனத்திடை மன்னிய மன்னே—மறை என்றசொல் இங்கே பொதுப்பெயராய் இறைவனை அடைதற்கு வழிகாட்டும் வேதாகமங்கள் முதலிய கலைக

லைக்குறிக்கிறது. பதிபசுபாசங்களைத் தெரித்துணர்த்தும் பலகலை யாகமவேதங்கள் பசுவுக்குப் பாசத்தடையை நீக்க வழிகாட்டிப் பதியை யடையச்செய்தலால் மறையுமாய்மறையின் பொருளு மாய் என்றும், அவற்றைக் கற்றுக் கேட்டுத் தெளிந்து நிட்டை கூடியதனலுண்டாகும் பதிஞானமானது சிவகரணமாய் மாறிய நிலையிலுள்ள தமது உள்ளத்தில் அநுபூதி ஞானமாய் விளங்குதலால் என்மனத்திடை மன்னிய மன்னே என்றும் அடிகள் கூறினர். மனம் என்பது இங்கே சிவனையே பற்றுகிற மனம்; அதனைத் **திருமூலர்** திருமந்திரம் 620-வது பாட்டில் 'மன்மனம்' என்று கூறுகின்றார் **திருநாவுக்கரசு அடிகள்** இந்த மனதைத் தமது தேவாரத்தில் 'மனமணி' என்றும் உலகபோ கத்தைப் பற்றும் கீழ்மனதைக் 'கடிமனம்' என்றும் கூறுகின்றார். (76-4.) அடிகள் கோயிற்றிருப்பதிகம் 10-வது பாட்டில் "சிந் தையே கோயில் கொண்ட எம்பெருமான்" என்று கூறுகின்றார்.

நீ என் உடல் இடம் கொண்டாய்—"ஞானிக்குக் காயம் சிவமே தநு வாகும்" என்று **திருமூலர்** திருமந்திரம் 2135-வது பாட்டில் கூறுதல் காண்க.

இனி உன்னை என் இரக்கேன்—அடிகள் தாம் திருப்பெருந்துறை யில் சிவபெருமானல் ஆண்டருளப்பெற்றுப் பேரின்பப்பேறு அடைந்தபின் பெறத்தக்கது ஒன்றுமில்லையாதலின் '**இனி** உன்னை என் இரக்கேன்' என்றார். இரக்கேன் என்பதில் 'கு' என் பது எதிர்காலம் காட்டும் விகுதி. ஏ.—ஈற்றசை.

இந்தப்பாட்டில் அடிகள் முதற்கண் முதலாவது அடியில் சிவ பெருமானை "ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே" என்று விளித்து அவனுடைய சத்துத்தன்மையையும், "குறைவிலா நிறைவே" என்று விளித்து அவனுடைய சித்துத் தன்மையையும், "கோதிலா அமுதே" என்று விளித்து அவனுடைய ஆநந்தத்தன்மையையும் குறிப்பிட்டுப் பின்னர் அச்சத்துத் தன்மைபற்றி அவன் தமக்கு அருள்செய்ததை மூன்றாவது அடியில் "சிறைபெறுநீர்போல் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே" என்றும், அச்சித்துத்தன்மைபற்றி அவன் தமக்கு அருள்செய்ததை இரண்டாவது அடியில் "மறையு மாய்மறையின் பொருளுமாய் என் மனத்திடை மன்னிய மன்னே" என்றும், ஆநந்தத்தன்மைபற்றி அவன் தமக்கு அருள்செய்ததை நாலாவது அடியில் "இறைவனே" நீ என்னுடலிடங் கொண்டாய் இனி உன்னை என் இரக்கேனே" என்றும் கூறியருளும் அழகை நோக்கி அகமகிழ்க. அடிகளுடைய நிறைவுபெற்ற அறிவு, அன்பு, செயல்கள் மூன்றும் சிவபெருமானுடைய சத்து, சித்து, ஆநந்தம் என்ற மூன்றையும் அடைதற்கு முறையே ஏதுக்களாய் இருத்தல் காண்க.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை

# புதுக்கவிகள்-Original Poetry

## தமிழ்நாட்டுச் சிறப்பு

[வித்வான் பெ. கோவிந்த மூப்பனார் அவர்கள்]

முல்லைக்குத் தேரும் மயிலுக்குத் துகிலும்
மூதறி வெள்ளைக்கு மூவா
நெல்லியும் நல்கிப் பெரும்புகழ் கொண்ட
நிலமன்னர் வாழ்ந்த தெந்நாடு
பல்வகைச் செடியும் கொடிகளு மலர்ந்து
பண்பயி லளிக்குநெல் முளைக்கும்
பில்குதே னளித்து மனவிரிந் துவக்கும்
பீடுசால் செந்தமிழ் நாடு. 1

கணவன்முன் னிறக்கப் புகழினை நிறுத்திக்
கடிதுயிர் துறந்தமா தேவி
மணமலர்க் கூந்தற் கண்ணகி தேவி
மனையறம் புரிந்த தெந்நாடு
இணைபிரி வில்லா திரையெடுத் தன்பால்
இன்புதுய்த் திறுதியி லிறக்கின்
துணையொடு மிறக்கும் அன்றில்கள் வாழும்
தூய்மைசால் செந்தமிழ் நாடு. 2

தங்குலம் பழித்த விசயனே கனகன்
தானையை வென்றவர் தலையில்
மங்கைகண் ணகிக்குக் கல்லினைக் கொணர்ந்த
மன்னவன் வாழ்ந்த தெந்நாடு
வெங்கரி பருத்துக் கோடுகை கொண்டு
விளங்கினும் எதிர்ப்புக்கஞ் சாது
பொங்கிமிக் கெழுந்து பாய்ந்துயிர் போக்கும்
புலியுறை செந்தமிழ் நாடு. 3

போர்புரிந் தைவர் நூற்றுவர் புலம்பப்
　புதியசோ றுதவிநீங் காத
பேர்பெறு பெருஞ்சோற் றுதியன்சே ரலர்கோன்
　பிறந்தர சாண்டதெந் நாடு
நீர்நிலை காய்ந்து நிலஞ்சுடும் வெயிலில்
　நீள்மரக் கனியொடு தேனைக்
கார்நிறக் கரிக்கு மந்தியீந் துவக்கும்
　காடுசூழ் செந்தமிழ் நாடு. 4

தங்கள்நன் னாட்டைத் தமரொடுங் காத்துத்
　தமக்கெதி ரின்மையைக் காட்டக்
கங்கையை வென்றும் கலிங்கத்தை வென்றும்
　காவலர் காத்த தெந்நாடு
எங்கெங்குச் செலினும் எதிர்விலங் கடக்கி
　எதிர்தமக் கின்மையைக் காட்டிச்
சிங்கங்கள் தங்க ளினத்தொடுந் திரியும்
　சேடுயர் செந்தமிழ் நாடு. 5

இசையி லக்கணமும் இயலி லக்கணமும்
　இயங்குநா டகவிலக் கணமும்
வசையிலா அகத்துப் புறத்திலக் கணமும்
　வகுத்தவர் வாழ்ந்ததெந் நாடு
அசையளி பாட அணிமயி லாட
　அழகழ கென்றுபுள் ளியம்ப
இசைவுறப் பெடைக ளிசைவுறப் பாம்பும்
　எதிர்வரும் செந்தமிழ் நாடு. 6

பிறவியால் மூப்பால் ஆடவர் பிரிவால்
　பெருமையொன் றில்லையென் றிகழ
அறிவினால் பெண்ணும் இளைஞரும் பெருமை
　ஆணொப்ப அடைந்ததெந் நாடு
சிறிய கள்ளியின்க ணறுமண அகிலும்
　சேற்றினில் நாறுதா மரையும்
மறிதிரைக் கடலில் முத்தமும் தோன்றி
　மாண்புறுஞ் செந்தமிழ் நாடு. 7

இன்னிசை வாய்ந்த தமிழ்த்தொடைக் குருகி
   இரந்தசெந் தமிழ்ப்புல வனுக்குத்
தன்னுயர் தலையை மன்னவன் குமணன்
   தந்துசீர் கொண்டதெந் நாடு
முன்னிருந் திசைக்கும் தமிழிசைக் கரவு
   முகமலர்ந் துருகிவந் தாடித்
தன்னையுங் கொடுத்து நல்லபாம் பெனும்பேர்
   தாங்குறும் செந்தமிழ் நாடு. 8

நெறிவழி யொழுகி அறிவினால் நிறைந்த
   நெஞ்சினோ டியாவர்க்கும் பணிந்து
பொறிகளை யடக்கிச் செயற்கருந் தவங்கள்
   புரிந்தவர் வாழ்ந்ததெந் நாடு
சிறுமுளை யாகிச் செம்மையோ டெழுந்து
   செந்நெல்நீள் கதிர்களால் வணங்கிப்
பொறுமையால் தம்மை அறுப்பினும் பொறுத்துப்
   புகழ்பெறுஞ் செந்தமிழ் நாடு. 9

வள்ளுவன் பொய்யா வாய்மொழிப் புலவன்
   மக்களுள் ளுவவெலாம் உணர்ந்து
தெள்ளுதீந் தமிழால் திருக்குறள் பாடிச்
   சிறப்புற வாழ்ந்ததெந் நாடு
கிள்ளைக ளேனைப் புள்ளொலி யொலித்துக்
   கிளைமரப் பொதும்பர்வாழ் புட்கட்கு
உள்ளுவப் பூட்டி உடனுறைந் தென்றும்
   உவகைகொள் செந்தமிழ் நாடு. 10

---

விரைந்து பெறுமின்கள் விரைந்து பெறுமின்கள்

**திருவள்ளுவர் நினைவுமலர் (1935)**

அழகிற் சிறந்தது; படங்கள் நிறைந்தது;
பொருள்வள மிகுந்தது

(நம்மிடம் கிடைக்கும்.) குறைந்த விலை அணு 9.

# இலக்கணமும் இலக்கியமும்:
# LANGUAGE AND LITERATURE

## கம்பரும் வள்ளுவரும்

[காரைநகர் திரு. சு. அருளம்பலம் அவர்கள்]

இராமாயணம் ஆரணியகாண்டத்தின்கண் கூறப்பட்ட அமைச்சியல் அரசியல் துறவு முதலாகிய விஷயங்களும் திருவள்ளுவரது திருக்குறளின்கண் கூறப்பட்ட அமைச்சியல் அரசியல் துறவு முதலாகிய விஷயங்களும் ஒப்புமையுடையனவாகக் காணப்படுதலினால் அவ்வொப்புமைப் பகுதியை இங்கே காட்டுதும்.

தசரதசக்கரவர்த்திக்கு நரைதோன்றிய பின்பு அவர் ஒருதினம் தனது வடிவத்தைக் கண்ணாடியிற் பார்த்தார். பார்த்தபோது நரை தோன்றியதைக் கண்ணாடியிலே கண்டார். இனி இராச்சியபாரத்தை இராமபிரானிடத்து வைக்க வேண்டுமேயொழிய நாம் கைக்கொண்டிருத்தல் தகாது என்று எண்ணங்கொண்டார். இராம பட்டாபிஷேகத்திற்குச் செய்யற்பாலனவாகிய கருமங்களைக் குறித்து ஆலோசித்தற்பொருட்டு 'மந்திரிமார் வருக' என அழைக்கப் பலவகைக்குணங்களும் பொருந்திய மந்திரிமார் வந்தனர். அவர்கள்,

"குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனுமெய்தினார்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினார்"

என்று அவர்களுடைய குடிப்பிறப்பு, கல்விஞானம், கேள்வி, தாம் மேற்கொண்ட செயலைப் பயன்தோன்றும் வரையினும் எத்துணை யிடையூறு வரினும் முயலும் விடாமுயற்சி, நடுவுநிலைமை, சினமின்மை, தருமமானவற்றை மேற்கொள்ளல் என்ற பலவகையான குணங்களையுங் கூறினார்.

இவ்வாறே வள்ளுவரும் குடிப்பிறத்தலை,

"அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடையான் தூதுரைப்பான் பண்பு"

என்னுங்குறளிலே 'குடிப்பிறத்தல்' என்பதனாற் கூறினார். பரிமேலழகர் குடிப்பிறத்தல் என்பதற்கு 'அமைச்சுப் பூணற்கமைந்த குடியின்கட் பிறத்தலும்' என்றார்,

கல்வி கேள்வி முதலாய விஷயங்களை வள்ளுவர்,

"வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு"

என்னுங்குறளில் 'கற்றறிதல்' என்பதனாலும் 'சொல்வன்மை' என்னும் அதிகாரத்தினாலும் விளக்கினார். கேள்வி அமைச்சர்க்குச்சிறந்த குணமாதலை "முதிர்ந்த கேள்வித்தொன்னெறி யமைச்சன்" எனப் பெரியபுராணத்துக் கூறுவதனாலும் அறியலாகும். பயனெய்தற்குக்காரணமாய முயற்சியை "ஆள் வினையோடு" என்னும் குறட்பகுதியினாற் கூறினார். நடுவு நோக்குதல் தருமந்தாங்குதல் முதலாய குணங்களை 'வினைத் தூய்மை' முதலாய அதிகாரத்தாற் கூறினார்.

இன்னும் கம்பர், மந்திரிமார் ஊகிக்குந்திறனும் மேன் மேலும் முயலுந்தன்மையும் மானமும் உடையவர்கள்,

"உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மானநோக்கிற் கவரிமா வனைய நீரார்"

எனக்கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை"

என்னும்குறளிலே 'மதிநுட்பம்' என்னும்பகுதியினால் 'உற்றதுகொண்டு மேல்வந்துறு பொருளை ஊகித்தறியவல்லதாகிய இயற்கையான புத்திநுட்பமுள்ளவர் என்பதனையும், 'நூலோடுடையார்க்கு' என்னும் பகுதியினால் 'அரிய நூலுங் கற்றவர்' என்பதனையும் குறிப்பிட்டார். "வினையின் வந்ததாயினும் மாற்றல் ஆற்றும் பெற்றியர்" என்பதனால் ஊழினாலே வேண்டாத காரியமானது வந்துசேரினும் அதனை முயற்சியினால் நீக்கலாம் என்னும் பொருளைக்கூறினார். இவ்வாறே வள்ளுவரும் முயற்சியினால் ஊழை வெல்லுந்தன்மையை,

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துளுற்று பவர்"

என்று கூறியருளினார்.

மானத்திற்குக் கவரிமாவை உவமை கூறியதுபோலவே வள்ளுவரும்,

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

எனக்கூறினார்.

இன்னும் கம்பர், அமைச்சர்கள் ஒருகாரியத்தைச் செய்யுங்கால் அத்தொழிலுக்கேற்ற கருவியையும் காலத்தையும் இடத்தையும் தமது நூலுக்கேற்பத் தெளிந்து ஊழ்வினைகளையும் ஆராய்ந்து தருமம் நல்லொழுக்கம் நற்செய்கையுடையராய் அக்காரியப் பயனைத் தம்மிறைவற்காம் வண்ணம் செய்யும் குணமுடையார்

"காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக்கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுணித்தறங் குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்துகொண்டு
பால்வரு முறுதியாவுந் தலைவற்குப் பயக்கு நீரார்"

எனக்கூறினர். இவ்வாறே வள்ளுவரும்

"கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு"

எனக்கூறினர்.

இன்னுங் கம்பர், அவ்வமைச்சர்கள் தம்மிறைவன் கோபித்த காலத்திலும் தம்முயிர்க்குறுதி எண்ணாது அரசனது கோபத்தைத் தாங்கி உறுதிநோக்கி நீதியை இடித்துக் கூறுவதாகிய இன்றியமையாக்குணத்தையும், சன்மார்க்க நெறியில் நின்று முக்கால நிகழ்ச்சிகளையும் உணருந்தன்மையும் உடையர்

"தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங்கால
மும்மையு முணரவல்லா ரொருமையே மொழியுநீரார்";

எனக்கூறினர். இவ்வாறே வள்ளுவரும், தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதியை உரைக்கும் அமைச்சர் குணத்தை,

"அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்"

என்னும் குறளினாற் கூறினர்.

"மூரித்தேந் தாரினாய் நீமுனியினு முறுதி நோக்கிப்
பாரித்தேன் றரும நுண்ணூல் வழக்கது வாதல்கண்டே"

(நாமகள் 185)

என்றார் சிந்தாமணியிலும்.

"செம்மையிற்றிறம்பல் செல்லாத் தேற்றத்தார்" என்பதை வள்ளுவர்,

"இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்"

"ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

"என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை"

என்னுங் குறள்களினாற் கூறினர்.

ஒருமையே மொழியுநீர்மையை வள்ளுவனார் 'தூது' 'சொல்வன்மை' முதலான அதிகாரங்களிற் கூறினர்.

இத்தன்மையராகிய அமைச்சர்கள் சூழ்ந்திருப்ப, தசரத சக்கரவர்த்தி தான் வெகுகாலம் அரசுசெய்து வயோதிக நிலையையடைந்தமையால் இராமபிரானுக்கு முடிசூட்டி இனிதிருக்க எண்ணியதை அவர்களுக்குக் கூறுகின்றவர் "மூவுலகினுமுள்ள புறப்பகைக்குப் பின்னிடாது பொருது அவற்றினைத் தவிர்த்துநின்ற யான் அகப்பகையாகிய காமமாதியன வற்றிற்கு அஞ்சிவாழ்வேனே,

"வெள்ளநீ ருலகினில் விண்ணி னாகரிற்
றள்ளரு பகையெலாந் தவிர்த்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காம மாதியா
முள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வெனோ"

எனக்கூறினர். இங்கே காமமாதியாமுள்ளுறை பகைவர் என்றது காமம் வெகுளி மயக்கம் என்னும் மனக்குற்றங்கள் மூன்றையு மென்க. இக்குற்றங்கள் மூன்றும் அஞ்ஞானமாகிய இருளின் மறைந்து கிடந்து ஞானமாகிய இறையைக்கண்டஞான்று பயந்து ஒடுதலின் கள்ளரிற் கரந்துறை காமமாதி என்றார் என்க. இவ்வாறே வள்ளுவரும்

"காமம் வெகுளி மயக்க மிவை மூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்"

என்று கூறினர். காமமாதியன மனக்குற்றமாதலை,

"வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னில் உருப்பன மூன்றும்"

என மணிமேகலையில் வருதலானும் அறியலாகும். வெஃகல்—விரும்பல்; வெகுளல் - கோபித்தல்; பொல்லாக்காட்சி - மயக்கம் அஃதாவது உண்மையறியாமை.

வடநூலார் காமமாதி என்றது, காமம் குரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸரியம் என்பவற்றை. இவை

அரிஷட்வர்க்க மெனப்படும். இவ்வாறும் அம்மூன்றனுள்ளே யடங்குதலின் காமமாதி என்றது காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றையுமேயென்க.

காமம் வெகுளி என்ற குறளின் உரையகத்து,

"அநாதியாகிய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப் பொருட்கட் செல்லுமாசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கட் செல்லுங் கோபமு மென வடநூலார் குற்றமைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான் மூன்றென்றார்" என்று கூறினர் பரிமேலழகர்.

இன்னும் தசரதர்,

பஞ்சி மென் றளிரடிப் பாவை கோல் கொள
வெஞ்சினத் தவுணதேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை யேறிய
வஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதோ

என்று ஐம்பொறிகளையும் வெல்ல வேண்டு மென்பதைக் கூறினர். மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய ஐம்பொறிகளி னுலுமாகும் ஐம்புல நுகர்ச்சியை வெல்லுதல் வேண்டும். அந்நுகர்ச்சி மனத்தைத் துன்பத்தினும் பாவத்தினும் செலுத்துவதேயன்றி ஞானயோக நெறிகளிற் செலுத்தாமை யின் அதனை வெல்ல வேண்டும். அவ்வாறு செய்தல் அருமை யாயிருந்தும் அதனை வெல்லுதல் தமக்கு எளிது என்பது தோன்ற "அஞ்சுதேர் வெல்லுமீதருமையாவதோ" என்றார். வள்ளுவரும்,

"அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

என்று கூறினர். இங்கே ஐம்பொறிகளையும் அஞ்சுதேர் என் றது போல, வள்ளுவரும்,

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

என்னுங்குறளில் ஏகதேச உருவகத்தால் ஐம்பொறிகளையும் ஐந்து யானைகளாகக் கூறினர்.

(தொடரும்)

# அகப்பொருள் அழகு

[வித்துவான் மணி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள்]

(முன் ௨அச௬-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு காதலன் தன் காதலியின்மாட்டு வைக்கும் அன்பிற்கு இணையான அன்பு உலகில் வேறில்லை என்பது ஒருதலை. அக்காரணம் பற்றியே அறிஞர்கள் தலைசிறந்த ஒரு பத்திமான் இன்பே வடிவினனாகிய இறைவன்மாட்டுக்கொள்ளும் அன்பை ஒரு காதலி தன் காதலன்பால் காட்டும் அன்பைப் போல் ஒளிரும் என்று கூறுவாராயினர். ஆனால், ஒரு காதலன் தன் தலைவியின்பால் செலுத்தும் அன்பின் திறத்தைப்பற்றியே யாம் இதுகாறும் கூறிவருகின்றோம். ஒரு தலைவி தான் தன்தலைவன்பால் செலுத்தும் அன்பின்பான்மையை யாம் இதுகாறும் இயம்பவில்லை. அவ்வன்பின் தனித்தூய்மையையும், தனிச்சீர்மையையும், பின்னர்ச் சமயம் வாய்த்துழி இனிது விளக்குவோம். தற்போது ஒரு காதலன் தன் தலைவியின்பால் செலுத்தும் தனியன்பின் மாட்சிமையை இன்னும் சில செம்பாக்களால் விளக்குவாம்.

உலகில் மாந்தர்க்கு எல்லாப்பொருள்களினும் விழுமிய பொருள் தங்கள் யாக்கைகளேயாகும். பொன்னும், பொருளும், மணியும், முத்தும், இன்னும் எத்தகைய விலையுயர்ந்த அருமணிகளும், நிதிகளும் ஒருவன் யாக்கைக்கு இணையாகுமெனக்கூற இயலுமோ? இயலாது. மண்ணில் மன்னும் மாண்பொருள்கள் அனைத்தும் அரும்பெறல் யாக்கைக்கு இணையாகா என்பது வெளிப்படை. அத்தகைய யாக்கையில் எல்லா உறுப்புக்களினும் தலைசிறந்த உறுப்புக் கண்ணேயாகும். அன்பு பொங்கிவழியும் உள்ளத்தைப்பெற்ற ஓர் அன்னை தன் இன்பச் சேயோடு கொஞ்சிக் குலாவும்போது, "பொன்னே! மணியே!" முத்தே! பவளமே! தேனே! பாகே! கனியே! கரும்பே! எனப் பலவாறு அதை அழைத்தாலும், அவளுக்குத் தலைசிறந்த அருமை பொதிந்து மிளிரும் செல்வமொழியாக அவளை அறியாமல் தோன்றுவது "கண்ணே" என்பதாகும். அம்மாது தன் இணையிலா மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்ற ஞான்று இயற்கையாகவே, "என் கண்ணே! மணியே!" என்றும், அல்லது, "என்கண்மணியே" என்றும் நவில்கின்றனள். ஆகையால், ஒரு பெண்மணிக்கும் எல்லாப்பொருள்களினும் சிறந்த மாண்பொருள் தன் கண்ணே என்று இனிது புலனாகின்றது. அருமையையும், உரிமையையும், கனிவையும், அன்பையும்

விளக்குகின்ற ஒப்பிலா இன்மொழி, "கண்ணே" அல்லது "கண்மணியே" என்று ஒருவர் பகர்வதேயாகும். அப்பெற்றித் தாய செம்மை செறிந்த மொழியை ஒரு காதலன் தான் நனி நச்சிய பொருவிலாத் தன் காதலியின்பால் கொண்டுள்ள அருமையையும், அன்பையும் ஒரு தனியிடத்தில் தனக்குள் தானே புகழ்ந்து கூறி, இத்தன்மைத்தெனப் பிறராலறிய இயலாத ஒரு தனியின்பத்தைத் தனக்குள்ளேயே எய்துகின்றான்.

அவன் அங்ஙனம் நவில்வதாக, ஒப்பிலா அறிஞராகிய தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறிய அருமைப்பா,

"கருமணியிற் பாவாய் நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்"

என்ற இணையிலா இன்பம் புதைந்து கிடக்கும் செம்பாவேயாகும். இப்பாவின் நுண்பொருள் காண நுணுக நுணுக ஆராயவல்லார்க்கே அதன்கண் அமைந்துள்ள அருமைகளும், அழகுகளும், இன்பங்களும் இனிது புலனாகும். இப்பாட்டில் ஒரு காதலன் தன் காதலியினிடத்தில் கொண்டுள்ள காதற் சிறப்பினை எங்ஙனம் கூறுகின்றான் என்றால், "என் கண்ணின் கருமணியில் உறையும் பாவாய்! நீ அங்கிருந்து இனி வெளியே போதல் வேண்டும். இதுகாறும் உனக்கு இணையான அருமைப் பொருள் வேறில்லையெனக் கருதி நான் உன்னை ஆங்கு வைத்திருந்தேன். இனி, உன்னினினும் சாலச் சிறந்த செம்பொருளாகிய என்காதலி என் உயிரோடு கலந்து விட்டமையால் அவளுக்குத்தான் நீ இருந்த இடத்தை நான் இனி நல்குதல் வேண்டும். அவளுக்கு இணையான பொருள் எனக்கு உலகில் பிறிதொன்றுமில்லை. அவளுக்கு நீ இருக்கும் இடமன்றி வேறிடம் பொருத்தமுடையதாகாது. ஆகையால், என்னை விட்டகலவேண்டியது அவசியமே" என்று சொல்வதாகக் குறிக்கப்பட்டுளது.

எல்லா உறுப்புகளிலும் சிறந்தது கண்ணென்பதும், அதனினும் சிறந்தது அக்கண்ணினுறுமணி யென்பதும், அம்மணியினும் சிறந்தது அதன் கண்ணுள்ள பாவை யென்பதும் அனைவரும் அறிந்த விஷயமாகும். அத்தகைய சிறந்த ஒப்பிலாப் பொருளையும் ஒரு காதலன் தன் இன்பக் காதலிக்குச் சற்றும் இணையாகமாட்டாதெனத் தனது உள்ளத்தில் எண்ணுகின்றான் என்று சொல்லும் அழகிற்கு இணையான அழகு வேறுண்டோ?

பத்தி நெறியில் தலை சிறந்து மிளிர்ந்த அன்பின் கொழுந்தாகிய, ஒப்பிலா இன்வாசகத்தை இயம்பிய மாணிக்க வாசகரும் அகப்பொருள் சம்பந்தமாகப் பாடியுள்ளார். அவர் அது சம்பந்தமாகத் "திருக் கோவையார்" என்னும் திவ்விய நூலை இயற்றியுள்ளார். அதன்கண் ஒரு காதலன் தன் காதலியின் சிறப்பைத் தனக்குள்ளேயே நயந்துரைப் பதாகக் கூறிய அருமைப்பா கீழ்க்குறிப்பதாகும்.

"ஈசற்கியான் வைத்த வன்பின கன்றவன் வாங்கியவென்
பாசத்திற்கா ரென்றவன் றில்லையின் னொளி போன்றவன்றோள்
பூசத்திரு நீறென வெளுத்தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத்திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே."

இதில் ஒரு காதலன் தன் காதலியின் கண்களின் அழகு களை எடுத்து இனிது ஓதி, இன்புறுகின்றான். மாணிக்க வாசகர் கடவுள் இணையடிகளிலேயே சதா அன்பைச் செலுத்தினவர் ஆதலால், ஒரு காதலன் தன் காதலியின் மாட்டுக்கொண்ட அன்பையும், அவர் கடவுளோடு சம் பந்தப்படுத்திக் காட்டுவாராயினர். இப்பெருமான் கூறு கின்ற காதலன் இதுகாறும் ஏனைய புலவர்களும், தெய்வப் புலவர் திருவள்ளுவருங்கூட இயம்பாத ஏனைய நலங் களோடு இறைவன் பத்திச் செல்வத்தையும் வளமாகப் பெற்ற ஒரு காதலனுவான். இக்காதலன் தன் காதலியைத் தனக்குள்ளேயே சிறப்பித்துப் புகழ்கின்றபோது தான் விரும்புகின்ற இறைவனிடத்தில் தான் கொண்ட அன்பின் தன்மையையும், அவன் அவ்வன்பின் காரணமாக நீக்கிய தன் பாசத்தின் தன்மையையும், அவ்வீசன் வீற்றிருக்கும் தில்லை யின் ஒளியின் தன்மையையும், அவன் தோள்களில் பூசப் பட்டிருக்கும் திருநீற்றின் தன்மையையும், அவன் திருவடி களைத் தான் பேசும் புகழ்ச்சியின் தன்மையையும் ஒப்பிட்டு இன்பவெள்ளத்தில் திளைக்கின்றான்.

(தொடரும்)

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

## குறிஞ்சி

தலைவன், களவொழுக்கத்தினிடையே, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோன், குறித்தகாலத்தில் வாராது வரவு நீட்டித்தவழித் தலைவி பிரிவாற்ளுது உடன்மெலிந்து வாட்ட முற்றிருத்தலைத் தாயர் அறிந்து, காரணந்தெரியாமையால் கட்டுவிச்சியை யழைத்துக் குறிகேட்டு உண்மையறிய நின்றபோது தோழி, அறத்தொடு நிற்பாளாய் உண்மையைத் தாயர்களுக்கு உணர்த்துமாறு கட்டுவிச்சியை நோக்கிக் கூறியது.

ஔவையார் பாடியது

23. அகவன் மகளே, அகவன் மகளே,
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே, பாடுக பாட்டே
இன் னும்பாடுக பாட்டேயவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

என்பது கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடுநின்றது

பதவுரை:

அகவன் மகளே, அகவன் மகளே—ஆடிப்பாடும் கட்டுவிச்சியே, ஆடிப்பாடும் கட்டுவிச்சியே; மனவுக் கோப்பன்ன-சங்குமணிகள் கோக்கப்பெற்ருற்போன்ற (நரைத்தலால் வெளுத்த); நல் நெடுங் கூந்தல் அகவன் மகளே—நல்ல நீண்ட கூந்தலையுடைய ஆடிப்பாடும் கட்டுவிச்சியே, அவர் நல் நெடும் குன்றம் பாடிய பாட்டே—அத்தலைவரது நல்ல நெடிய குன்றத்தைப்பாடிய பாட்டையே; பாடுக பாட்டே—அப்பாட்டையே பாடுக; இன்னும் பாடுக பாட்டே—இன்னும் ஒரு முறை அப்பாட்டையே பாடுக,

அகவல்—ஆடுதல், பாடுதல். மனவு—சங்கு, சோழி; 'இடையிடை மனவுகோத்து' (பெரியபுராணம்—கண்ணப்பர்). தலைவிக்கு இத்தகைய நோய் தந்தான் நீ பாடிய குன்றுத்துத்தலைவனே. ஆதலின் அவன் குன்றத்தைப் பாடிய பாட்டையே பாடுக. அதனால் தாயர் உண்மையறியும் தன்மையினராவர் என்று கட்டுவிச்சியிடம் தோழி யறத்தொடு நின்றாள் என்க.

மேற்கோள் விளக்கம்:

1. "அகவன்மகளே ...........பாட்டே"

"இது கட்டுக்காணிய நின்றவிடத்து அறத்தொடு நின்றது. அதுவும் வெறியாட்டின்கண் அடங்கும் தலைவிக்குக் குறிப்பினுமிடத்தினுமல்லது வேட்கை நெறிப்பட வாராமையின் சின்னாள் கழித்தும் அறத்தொடு நிற்பாளாகலானும் செவிலியும் நற்றாயும் கேட்டபொழுதே அறத்தொடு நிற்பாராகலானும் ஆண்டு வழுவின்று".

தோல்—பொருளியல், பக். 792.

2. "அகவன் மகளே அகவன் மகளே"—"மகள் மகளே என வரும். ஒப்பின் முடித்தல் என்பதனால் முறைமை சுட்டாத மகள் என்பது ஏகாரம்பெற்று விளியேற்கும்" என்பதற்கு மேற்கோள்.

தோல்—சொல்-தெய்வ. சூ. 142

3. உயர்திணைப் பெயர்க்கண் விளியுருபுவந்தவாற்றிற்கு மேற்கோள்.

நன்னூல்—மயிலை பக். 191

'அகவன் மகளே' என மும்முறை விளித்தது இகழ்ச்சிக் குறிப்புப் பற்றி என்க.

"மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் அகவன் மகளே" என விளித்தது அறிவின்றி ஆண்டால் முதிர்ந்தாள் என்பதையும், தலைவியின் துயரைப் போக்கும் வழியறியாது வழியல்லா வழியைக் கைக்கொண்ட அறிவின்மையையும் குறிக்கும்.

"பாடுக பாட்டே, பாடுக பாட்டே" என்னும் அடுக்கு, தலைவியின் வேட்கைக் குறிப்பை விளக்கிற்று. அப்பாட்டுத் தலைவியின் நோயைத் தணிக்கும் என்பதையும் உணர்த்திற்று.

மெய்ப்பாடு—பிறன்கண் தோன்றிய மூப்புப்பற்றிய இளிவரல்.

பயன்—அறத்தொடு நிற்றல்.

# அறிவியற் பகுதி - Science

## சிற்ப நூல்

[துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள்]

### (1) தூபி அமைப்பு

" தூல லிங்கமாந் தூபி சூக்குமமா முள்ளிலிங்கம்
மேலும் பலிபத்திரம் "

(சைவசமய நெறி)

(இதன் பொருள்) சிவாலயங்களிலே உள்ள பலிபீடம் பத்திர லிங்கம்; தூபி தூல லிங்கம்; சிவலிங்கம் சூக்குமலிங்கம் என்னப்படும்.

இலிங்கம் என்னும் பதம், இல்+இம்+கம் எனப் பிரிந்து, மலத்தால் கட்டுண்ட ஆன்மாக்களை மாயையில் ஒடுக்கிப் பின் படைப்பாதி ஐந்தொழில்களை நடத்துவதற்கு ஆதாரமானது எனப்பொருள்படும். (சிவலிங்க உருவ விளக்கம்.)

ஐந்தொழில்களின் பொருட்டுச் சிவபெருமான் ஒன்பது விதமான திருமேனி எடுத்து நடிப்பர்:

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈருக
நவமவை யாகு நடிப்பவன் ருனே.
தலையான நான்கும் தனது அருவாகும்
அலையா அருவுரு ஆகும் சதாசிவம்
நிலையான கீழ்நான்கும் நீடுரு வாகும்
துலையா யிவைமுற்று மாயல்ல தொன்றே.

என்ற திருமந்திரப் பாட்டுக்களின்படி

சிவன்—சத்தி—நாதம்—விந்து அருவத் திருமேனிகளாகவும், சதாசிவன்—அருவுருவத் திருமேனியாகவும், ஈசன்—அரன்-மால்—அயன் உருவத் திருமேனிகளாகவும் ஆகும்.

திருமூல நாயனர் ஒவ்வொரு பதத்தையும் எப்பொருளில் வழங்கி இருக்கிருர் என்பதை வாசகர்கள் உணரவேண்டும். ஐம்முகன்=சதாசிவன், ஈசன்=மகேசன், அரன்= உருத்திரன் என்னும் பொருள்களில் வழங்கி இருக்கிருர்.

ஐந்தொழில்கள் நடைபெறுகிற்கும்போது சதாசிவ நாயனாருடைய ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய ஐந்து முகங்களும், முறையே சதாசிவ மூர்த்தி, மகேச்சுரர், உருத்திரர், விண்டு, பிரமா இவர்களை இயக்காநிற்கும்.

சிவலிங்கம் திருமுகங்களை வெளிப்படையாகப் பெற்றிருப்பின் முகலிங்கம் எனப் பெயர்பெறும். அது, ஆட்டியம், அநாட்டியம், சுரேட்டியம், சர்வசமம் என நான்கு வகைப்படும்.

ஆட்டியம்=1008 இலிங்கங்களை உடையது.

சுரேட்டியம்=108 இலிங்கங்களை உடையது.

ஆட்டியம், அநாட்டியம், சுரேட்டிய இலிங்கங்கள்முகங்களைப் பெறா.

முகங்களைப் பெறாதவை அவ்வியக்த இலிங்கங்கள் என்றும், முகங்களைப் பெற்றவை வியக்த இலிங்கங்கள் என்றும் பெயர் பெறும்.

சர்வசமம் என்பன 5, 4, 3, 2, 1 முதலிய முகங்களைப் பெற்றவை.

ஈசானம்—தற்புருடம்—அகோரம்—
வாமதேவம்—சத்தியோசாதம் =5 ம்
ஈசான மொழிந்த முகங்கள் =4-ம்
தற்புருட, அகோர, வாமதேவ முகங்கள் =3-ம்
தற்புருட—சத்தியோசாத முகங்கள் =2-ம்
தற்புருடமுகம் =1-ம்

பெற்றிருக்க நிற்பவை சர்வசமம் என்னப்படும்.

அநாசிருதர்—அநாதர்—அநந்தர்—வியோமரூபர்—வியாபகர் என்னும் மூர்த்திகள் ஐவரும், பரை—ஆதி—இச்சை—ஞானம்—கிரியை என்னும் ஐந்து சத்திகளைக்கொண்டு முறையே (1) சிவசாதாக்கியம், (2) அமூர்த்தி சாதாக்கியம் (3) மூர்த்தி சாதாக்கியம், (4) கர்த்திரு சாதாக்கியம், (5) கன்மசார்தாக்கியம், ஆகிய ஐந்து சாதாக்கியங்களைத் தோற்றுவித்து, அசுத்த, பஞ்ச கிருத்தியங்களை நடத்துவர். இஃது அநாசிருதருடைய அவதர காரியம் என்னப்படும்.

கன்ம சாதாக்கியருக்கு சுத்தா சுத்த பஞ்ச கிருத்தியங்களின் தொழில்கள்தாமே ஐந்து திருமுகங்களாம்.

அநாசிருதர் என்பவர் சமனையாம் பராசத்தியும், உன்மனையாம் பரமும் தம்முள் ஒன்றி ஆன்மாக்களைத் திருவுள்ளத்து அடைத்த நிலையர்.

அநாசிருதருக்கு பிரமன் அளவாகவும், அநாதருக்கு விஷ்ணு அளவாகவும், அநந்தருக்கு உருத்திரன் அளவாகவும், வியோமரூபர்க்கு மகேசன் அளவாகவும், வியாபகருக்கு சதாசிவன் அளவாகவும் வியாப்தி.

மேற்கூறிய ஐவருள் வியாபகருடைய மூர்த்திபேதமான ஆடகேசுரர் பாதாளாதிபதியாய் ஆங்குள்ளவர் தொழ எழுந்தருளுவர்.

வியோம ரூபருடைய மூர்த்திபேதமான கூர்மாண்ட தேவ நாயனார் இருபத்தெட்டுக் கோடி நரகங்களுக்கு அதிபதியாயிருப்பர்.

அநந்தருடைய மூர்த்திபேதமான காலாக்கினி உருத்திர தேவர் பிரம்மாண்டத்தை அதிட்டித்து எழுந்தருளி இருப்பர்.

அநாகதருடைய மூர்த்திபேதமான ஆதாரசத்தி அண்டங்களைச் சுமந்து எழுந்தருளி இருக்கும்.

இவ்வகைச் சகலபுவன ஆதாரமாய், நின்று, சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்—அதாவது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய ஐந்து காரியங்களையும் நடத்து மிடத்து பிரம, விஷ்ணு, உருத்திர, மகேசுர, சதாசிவ பேதங்களாக நிலைபெறும் இவற்றைத்தான் முகலிங்கங்கள் காட்டுகின்றன.

பெரும்பாலும், எல்லாக் கோவில்களிலும் அவியக்த (=முகமில்லாத) இலிங்கங்களே தாபிக்கப் பட்டிருக்கின்றன.

மேலே கூறிய தத்துவ முறைகளை ஒரு சிற்பி தெரிந்து கொள்ளாவிட்டால் கோவில்களில் உருவங்களை அவன் சரியாக அமைக்கமாட்டான். ஆகையால், சிற்பிக்குத் தத்துவ நூற் பயிற்சி அவசியம் வேண்டும்.

தற்காலம் சில சிற்பிகளுக்கு உருவங்கள் அமைக்கத் தெரியுமே யொழிய தத்துவமுறை தெரியாது. எந்தெந்த உருவங்களை எந்தெந்த இடங்களில் அமைக்கவேண்டும் என்பதும் தெரியாது. வேலைசெய்பவர்களுக்கும் அப்படியே. ஆகையால் தற்காலத்தில் நடக்கும் கோவிற்றிருப்பணிகள் எல்லாம் தத்துவமுறைக்கு விரோதமாகச் செய்யப்பட்டு வருவதை நோக்க, அவ்வழுக்களை எடுத்துக்காட்டாமல் இருக்க மனம் துணியவில்லை.

ஒருவனுடைய உடல் அமைப்பு சரியாய் இருந்தால் மாத்திரம் அவன் வியாதியில்லாமல் சுகமாக வாழலாம். உடலில் உள்ள அவயவங்களின் அமைப்பில் குறைவு ஏற்பட்டால், அல்லது ஒரு அவயவம் இருக்கவேண்டிய இடத்தில் இன்னொரு அவயவம் ஏற்பட்டால், எப்படி அந்த உடல் சுகமாக இருக்க முடியாதோ, அதுபோலவே, கோவிலின் அமைப்பு சரியாக அமைக்கப்படா விட்டால், அக்கோவில் உள்ள ஊர் விருத்தி அடையாது.

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது நம் மூதாட்டியினுடைய வாக்கு.

நம்முடைய பழைய ஊர்கள் எல்லாம் ஒவ்வோர் ஆலயத்தை உடையதாகவே இருக்கும்.

பழங்காலத்தில் ஊர்கள் எல்லாம் செழிப்புற்றவாக இருந்தவென்றால், அப்போது ஆலயங்கள் சீர்குலையாமல் தத்துவ முறையில் அமைக்கப்பட்டிருந்தமையே காரணம்.

இப்போது அப்படி இல்லாமைக்குக் காரணம், பின்னல் அக்கோவில்களைப் பழுதுபார்த்த பெரியார்கள் தத்துவ முறையைக் கவனியாமல், தத்துவ நூற்பயிற்சி இல்லாத சிற்பியின் இஷ்டப்படி விட்டுவிட்டதால் வந்ததே யாகும்.

மேலும், கோவில்களைப் புதுப்பிக்கும் திருப்பணியாளர்கள் தாங்கள் நேரில் இருந்து பணி ஆற்றுவிப்பது கிடையாது. தங்களுக்குக் கீழ் அலுவலாளர்களையோ குத்தகைக்காரர்களையோவைத்துத் திருப்பணி செய்விக்கிறார்கள்.

இவர்களுக்குச் சிற்ப நூற்பயிற்சியும் தத்துவ நூற்பயிற்சியும் கிடையாது. தத்துவம் என்றால் "அது எத்தனை வீசை" என்று கேட்கக்கூடியவர்களும் உளர்.

ஆகையால், இவர்கள் தற்காலம் சிற்பிகள் என்று சொல்லப்படும் கற்றச்சர்களிடமும், கோபுரத்தில் உருவங்கள் அமைக்கும் செங்கற் கொத்தர்களிடமும் விட்டுவிடுகிறார்கள். அக்கொத்தர்களோ பொதுமக்கள் பரவசப்படும்படியாக வேடிக்கை உருவங்களை அமைத்துவிட்டு, திருப்பணியாளர்களிடம் நல்ல மதிப்பையுங் கூலியையும் பெற்றுச் செல்லுகிறார்கள்.

இதுதான் உலக வழக்காயிருக்கிறது. ஆனால், திருப்பணி முடிந்ததும் பார்த்தாலோ, அந்த ஊருக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன.

ஆயைால், தத்துவமுறை இன்னதென்று உலகர்க்கு அறிவிப்பது கற்றறிந்த மாந்தர் கடன். அக்கடனைத் தீர்ப்பான் கருதி ஈண்டுத் "தூபி அமைப்பு" என்பதை எழுதுகின்றும்.

திருக்கோவில்களில் மூலத்தானங்களில் உள்ள இலிங்கங்கள் சூக்கும லிங்கங்கள் என்று கூறப்படும்.

அவை பெரும்பாலும் முகங்கள் வெளிப்படையாகத் தோன்றாத அவ்வியக்த இலிங்கங்களாகவே இருக்கும்.

ஒருவனுடைய தேகத்தில் சூக்குமமா யிருப்பது அவனுடைய ஆன்மா. ஆன்மா சூக்குமமா யிருப்பதால் கண்ணுக்குத் தெரியாது. ஆன்மாவுக்குத் தூலமாயிருப்பது தேகம். தேகத்தினிடத்தில் தான் முகம் வெளிப்படையாயிருக்கும்.

அதுபோல், சூக்குமமாயுள்ள சிவலிங்கத்துக்குத் தூலமாயுள்ளது தூபி. தூபியினிடந்தான் சதாசிவத்தினுடைய ஐந்து முகங்களும் வெளிப்படையாயிருக்கும். அவ்வைந்து முகங்களும் கண்களுக்கு நன்றாகத் தோன்றும். அப்படி முகங்களைத் தெளிவாக, அவற்றிற்கு இயற்கையாய் ஏற்பட்ட நிறங்களுடன் அமைப்பதுதான் முறை.

அப்படி முகங்களையுடைய தூபியைத்தான் தூலலிங்கம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

சதாசிவம் (=சதாசிவ மூர்த்தி) வேறு, சதாசிவ நாயனர் வேறு என்பதை ஒவ்வொருவரும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சதாசிவ நாயனர் தம்முடைய ஐந்து முகங்களினின்றும் பஞ்ச கிருத்திய கருத்தாக்களை நடத்துவர்.

சதாசிவ நாயனருடைய பஞ்சமுகங்களை ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் எனக் கூறுவர்.

அவை தூலக்கண்களுக்குத் தெரியா.

ஆகையால், அப்பஞ்ச முகங்களால் இயக்கப்படும் பிரமா விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் கருத்தாக்களை அப்பஞ்சமுகங்கள் உள்ள இடங்களில் அமைப்பது முறை.

ஈசானம் ஊர்த்துவ முகமாகையால் தூபியின் கலசமே சதாசிவம் ஆகவும் ;

தூபியின் கிழக்குப்பக்கத்தில் தற்புருடமாகையால், அங்கே மகேசையுடன் கூடிய மகேசனையும்;

தூபியின் தெற்குப்பக்கம் அகோர முகமாகையால் அங்கே உமையோடுங்கூடிய உருத்திரனையும்;

தூபியின் வடக்குப் பக்கம் வாமதேவ முகமாகையால், அங்கே வாணியுடன்கூடிய பிரமாவையும்;

தூபியின் மேற்குப்பக்கம் சத்தியோசாத முகமாகையால், அங்கே இலக்குமியுடன் கூடிய திருமாலையும் அமைப்பது முறை. இஃது

“ நடுவு கிழக்குத் தெற்கு உத்தர மேற்கு
நடுவு படிகம் நற்குங்கும வன்னம்
அடைவுள அஞ்சனம் செவ் வரத்தம் பால்
அடியேற் கருளிய முகமிவை யஞ்சே ”

என்ற திருமூலர் வாக்கின்படி கூறப்பட்டது.

ஈசான முகமாகிய சதாசிவம் படிக நிறம், தற்புருடமுகமாகிய மகேசன் குங்குமவன்னம், அகோரமுகமாகிய உருத்திரன் அஞ்சன நிறம் (கறுப்பு), வாமதேவ முகமாகிய பிரமா செவ்வரத்தம் நிறம், சத்தியோசாத முகமாகிய மால் பால் நிறம்.

தூபிக்கு வர்ணம் தீட்டுகிறவர்கள் இம்முறையை நன்ருய்க் கவனிக்க வேண்டும்.

மேலும், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் பஞ்ச மூர்த்திகளும் ;

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் 5-பூதங்களுக்கும் ,

பிருதிவி மண்டலம், அப்பு மண்டலம், தேயு மண்டலம், வாயுமண்டலம், ஆகாய மண்டலம் என்னும் 5 மண்டலங்கட்கும்;

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என்னும், 5 கலைகட்கும்;

பிருதிவி மண்டலத்திலுள்ள 108 புவனங்கட்கும்; அப்பு மண்டலத்திலுள்ள 56 புவனங்கட்கும்; தேயு மண்டலத்திலுள்ள 27 புவனங்கட்கும்; வாயு மண்டலத்திலுள்ள 18 புவ

னங்கட்கும்; ஆகாயமண்டலத்திலுள்ள 15 புவனங்கட்கும் ஆக 224 புவனங்கட்கும் அதிகாரிகள் ஆவர்.

மேலும், தத்துவங்கள் 36ல் பிரமா பிருதிவி தத்துவம் ஒன்றுக்கும்; விஷ்ணு அப்பு தத்துவமுதல் சித்ததத்துவம் ஈருக 23 தத்துவங்கட்கும்;

உருத்திரன் புருடதத்துவ முதல் மாயை ஈருக உள்ள ஏழு தத்துவங்கட்கும்;

மகேசன் சுத்தவித்தை, ஈச்சுரம் சாதாக்கியம் என்ற மூன்று தத்துவங்கட்கும்;

சதாசிவம் விந்து, நாதம் என்ற இரண்டு தத்துவங்கட்கும் அதிகாரிகளாயுள்ளவர்கள்.

பஞ்சாட்சரங்களில் நகரம் பிரமாவையும், மகரம் விஷ்ணுவையும், சிகரம் உருத்திரனையும், வகரம் மகேசுரனை யும், யகரம் சதாசிவத்தையும் இயக்காநிற்கும்.

ஆகையால் தூபியின்கண் வடக்கில் சத்தியுடன் கூடிய பிரமாவையும், மேற்கில் சத்தியுடன் கூடிய விஷ்ணுவையும், தெற்கில் சத்தியுடன் கூடிய உருத்திரனையும், கிழக்கில் சத்தி யுடன் கூடிய மகேசனையும் அமைப்பது அவசியத்திலும் அவ சியம்.

ஊர்த்துவ முகம் சதாசிவமானதால் அவியக்தமாய் இருக்கும் தூபியின் கலசமே சதாசிவமாகும்.

இம்மாதிரி தூபியை அமைக்காவிட்டால் அக்கோயிலில் தெய்வத்தன்மை பொருந்தி யிராது என்பதை ஒவ்வொரு வரும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

பூர்வம், அதாவது, ஆரியர்களுடைய கலப்பு ஏற்படாத தற்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டுள்ள தூபிகள் எல்லாம் மேலே கூறிய தத்துவ நான்முறைப்படி அமைக்கப்பட்டன.

ஆரியக்கலப்பு ஏற்பட்ட பிறகு திருப்பணி செய்யப்பட்ட கோவில்களில் எல்லாம் இந்த நன்முறையானது வழுவிப் போய் இருக்கிறது.

ஆரியர்கள் உருத்திரனை மசான உருத்திரனுகக் கருதி, கோவில்களிலுள்ள தூபிகளில் தெற்கே உருத்திரன் இருந்தால் அப்பக்கத்திலுள்ள ஊர் பூராவும் எரிந்து விடும் என்பதாகத் தானே ஒரு கொடிய பொய்க்கதையை உலகில் கட்டிப் பரவ விட்டிருக்கிறார்கள்.

496



இன்னும் ஆரியப்பிராமணர்களுடைய உட்கருத்து என்ன வென்றால், தெற்கில் உருத்திரனை நிர்மாணித்தால் தென்னாடாகிய தமிழ் நாடு வாழ்வடையும், தமிழர்கள் செல்வ மிகுத்து வாழ்வார்கள், தமிழ்மொழியும் வளர்ச்சியடையும், ஆனால் தென்னாட்டிலுள்ள ஆரியர்களுக்கு வாழ்வு சிறுத்துப் போகும்; ஆகையால், உருத்திரனுக்குப் பதிலாக வேறு எந்த மூர்த்தத்தையாவது, உதாரணமாக தட்சணாமூர்த்தியை, நிர்மாணித்து விட்டால், தமிழரும் வளங்குன்றுவர்; தமிழ் மொழியும், தமிழ் நாடும் வளங்குன்றும், ஆரியரும் வளம் பெறுவர், ஆரியபாஷையும் ஆரியநாடும் வளர்ச்சியுறும் என்பதே யாகும்.

இதனை அவர்கள் ஒருவர்க்கொருவர் அதிரகசியமாகப் பேசிக் கொள்வதை யாவரும் கவனித்தால் தெரிந்து கொள்ளலாம்.

அதனாலே தான், ஆரியப்பிராமணர்கள் தூபியின் தெற்கில் உருத்திரனுக்குப் பதிலாக சாதாரண தட்சணா மூர்த்தி உருவத்தையோ, யோகதட்சணா மூர்த்தி உருவத்தையோ, வீணாகான தட்சணா மூர்த்தி உருவத்தையோ நிர்மாணிக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார்கள்.

அந்தக் காலந் தொட்டுத்தான் கோயில்களில் தெய்வத் தன்மை குறைந்தது, தமிழ்நாடு செழிப்பற்றது, தமிழர் உரம் இழந்தனர், தமிழ் மொழி இருக்க இடமில்லாமல் தவிக்கலாயிற்று.

தமிழர்களே ! இதனைத் தெரிந்த பிற்பாடும் உறங்கிக் கொண்டிருப்பது நீதியா?

ஒருவன் உடலில் உள்ள இருதயத்தை எடுத்து வேறு ஒரு பக்கத்தில் வைத்து ஒரு வைத்தியர் தைத்துவிடுவாரானால், அவனுடைய உடல்நிலை நிற்குமா? யோசித்துப்பாருங்கள் !

உடம்பைப் போன்றது கோவில்.

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பெருமானுக்கு வாய்கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

ஆகையால், திருப்பணியாளர்கள் கோவில்களில் தூபிகள் அமைக்கும்போது அதிக ஜாக்கிரதையாகக் கூட இருந்து தத்துவ நான்முறை தவறாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

# தமிழெழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[திரு.பா.வே. மாணிக்கநாய்க்கர்—க.ப. சந்தோஷம் B.A., L.T.]

(முன் ௪௯௨-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆறுவது படத்தில் பத்து அகரவெழுத்துக்கள் முப்பத்து நான்கு பகுதிகளாக வகுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த முப்பத்துநான்கு பகுதிகளும் திருப்பியமைக்கப்பட்டு, "ஓ நமோ நாராயணாய" என்ற எட்டெழுத்தாகிய மூல மந்திரமாயமைவது அடுத்த படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. ஈண்டுப் பிரணவ எழுத்தாகிய ஓகரம் தனித்து நிற்கவில்லை. எட்டெழுத்துக்களில் அதுவும் ஒன்றாகின்றது. அன்றியும், முப்பத்துநான்கு பகுதிகள் என்ற கணக்கில் ஓகாரத்தின் மூன்று பகுதிகளும் அடங்கி யிருக்கின்றன. அஷ்டாக்ஷரத்தின் மிகச் சிக்கலான வடிவத்திலும் எழுத்துக்கள் தெளிவாகவும் மிக ஒழுங்காகவும் அமைதி பெறுகின்றன. அஷ்டாக்ஷரத்தை உண்டாக்குவதற்கு வேண்டப்படும் பிரணவ எழுத்துக்கள் பத்து; விஷ்ணுவின் அவதாரங்கள் பத்து; இப் பத்தவதாரங்களும், கருக்குழியில் தோன்றாத ஐந்து தேவ அவதாரங்களாகவும், கருக்குழியில் தோன்றிய ஐந்து மனித அவதாரங்களாகவும் பகுக்கப்படும். இப்பத்து அவதாரங்களும் பராபரை என்ற தெய்வத்தின் பத்து முகங்களிலிருந்து தோன்றினவென்றும், இவற்றில் தேவ அவதாரங்கள் ஐந்தும் பரத்தின் ஐந்து முகங்களிலிருந்தும், மனித அவதாரங்கள் ஐந்தும் பரையின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தனவென்று சொல்வது ஒருசாரார் கொள்கையாம்.

அஷ்டாக்ஷரத்தைத் தோற்றுவிக்கின்ற பத்து மூலப் பிரணவ அகரங்களும் முப்பத்துநான்கு பிரிவினையுடையவை; பத்து அவதாரங்களுடைய கைகளின் தொகையும் முப்பத்து நான்கு ஆகும். ஐந்து தேவ அவதாரங்களாகிய மச்ச, கூர்ம, வராக, கற்கி, நரசிம்ம உருவங்கள் ஒவ்வொன்றும் நான்கு கரங்களை யுடையனவா யிருந்தன. கரங்களின் மொத்தத் தொகை இருபது. மனித அவதாரங்களில் மூன்றை இராமர், பரசுராமர், பலராமர், எனச் சில வைஷ்ணவர்களும், இராமர், பரசுராமர், பௌத்தர் என்று வேறு சில வைஷ்ணவர்களுங் கூறுவார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்குங் கைகள் இரண்டு. ஆக மூன்று மனித அவதாரங்களின் கைகள் ஆறு; வாமன அவதாரத்தில் பிறக்கும்பொழுது கைகள் இரண்டு, விஸ்வரூபமெடுத்தகாலையில் இவை நான்காயின. இது பாகவத புராணத்திற் கண்டது. கிருஷ்ணன் கருவினின்று தோன்றிடினும் பிறக்கும்பொழுது நான்கு கைகளையுடைய

வனு யிருந்து இவற்றுள் இரண்டைப் பிறகு இழுத்துக் கொண்டானென்று மேற்குறித்த புராணமே கூறுகின்றது. இங்ஙனம், இவ்விரண்டு அவதாரங்களுக்கும் கைகள் எட்டு. எல்லா அவதாரங்களையும் சேர்த்தெண்ணுவதால் பெறப்படும் தொகை முப்பத்து நான்கு (20 + 6 + 8).

அஷ்டாக்ஷரத்தைத் தோற்றுவிக்கும் பத்து அகர வெழுத்துக்களின் பகுதிகள் முப்பத்துநான்கு. பத்து அவதாரங்களுடைய கரங்களின் தொகை முப்பத்துநான்கு. இஃதொரு வியத்தகு ஒற்றுமை யன்றோ? இப்பொழுது, இந்திய புராணங்களிற் கூறப்படும் தெய்வங்களைப் பற்றிய கதைகள், தமிழ் எழுத்துக்களின் வடிவங்களை யொட்டி அமைக்கப்பட்டனவா? அல்லது, கதைகளை ஒட்டி எழுத்துக்கள் வகுக்கப்பட்டனவா? என்ற கேள்வி பிறக்கின்றது. இதுபற்றி, ஆராய்வது இப்பொழுது எனது நோக்கமன்று.

மூல மந்திரங்களெல்லாம் பஞ்சாக்ஷரத்தையே அடிப் படையாகக் கொண்டனவென்றும், பஞ்சாக்ஷரம் மூலை யெழுத்தாகிய ஒகரத்தை அடிப்படையாகக் கொண்டதென் றும் சாஸ்திரங்களில் மறைபொருளாகக் கூறப்பட்டுளது. இதை நாம் பார்த்த எழுத்து வடிவங்களின் துணைகொண்டு விளக்கலாம். எல்லா மந்திரங்களும் பிரணவமாகிய ஒகரத்தி லிருந்து பிறக்கின்றன வென்பது, ஓகரம் அகரமாகக்கூடிய உருவம் பெற்றிருப்பதாலும், அகரத்திலிருந்தே எல்லா மந் திரங்களும் தோன்றுவதாலும் விளக்கமுறுகின்றது. மகா மந்திரங்களெல்லாம் பஞ்சாக்ஷரமே என்பதை மூன்று வெவ் வேறு வகைகளிற் காணலாம்:—முதலாவது, "ஓ—நமசிவய" என்ற பஞ்சாக்ஷரம் ஐந்து பிரணவ அகரங்களிலிருந்து தோன்றுகிறது; "ஓ—சரவணபவ" என்ற ஷடாக்ஷரமும் ஐந்து பிரணவ அகரங்களிலிருந்தே பிறக்கின்றது; "ஓ—நமோ நாராயணாய" என்ற அஷ்டாக்ஷரம் ஈரைந்து பிரணவ அகரங்களிலிருந்து உதிக்கின்றது. இரண்டாவது; அஷ்டா க்ஷரத்தில், தெளிவாய் இரண்டு பகுதிகளுள: "ஓ—நமோ" என்பது ஒன்று; மற்றொன்று "நாராயணாய" என்பது; இவற்றுட் பிந்தியது ஐந்தெழுத்தாலாயது; மற்றுமிது "நமசிவய" எனும் பஞ்சாக்ஷரத்தைப் போலவே நகரத்தில் தொடங்கி யகரத்தில் முடிகின்றது; "ஓ நமோ" என்ற முதற் பகுதியில் மூன்றெழுத்துக்களே யுளவேனும், ஒகரத்தை அதிலடங்கி நிற்கும் அ, உ, ம, என்ற மூன்றெழுத்துக்களாக விரிப்போமாயின், ஈண்டும் ஐந்தெழுத்துக்களைப் பெறுகின் றோம். மூன்றாவது வகை இவற்றைவிட நயமுடையது; இஃதென்னவெனின், மந்திரங்களில் இரட்டிக்கும் எழுத்துக்



படம் 6



படம் 7

களை நீக்கி எண்ணுவதாகும். மூன்று மந்திரங்களுக்கும் பிரணவமாகிய ஓகரம் பொது. இதை விடுத்து மற்ற வெழுத்துக்களை எடுத்துக்கொள்வோம். பஞ்சாக்ஷரத்தில் ஒரெழுத்து மிரட்டிக்கவில்லை. ஷடாக்ஷரத்தில் வகரமாகிய ஒரெழுத்து இருமுறை வருகின்றது. இவற்றிலொன்றை நீக்குவோமாயின், ஷடாக்ஷரம் பஞ்சாக்ஷரமே யாகும். ஓகரத்தை விடுத்தபின் அஷ்டாக்ஷரத்தில் இருப்பன "நமோ நாராயணாய" என்ற ஏழு எழுத்துக்களே. இவற்றில் நகரமும் யகரமும் இரட்டித்து நிற்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றை விலக்குவோமாயின், எஞ்சி நிற்பன ஐந்தெழுத்துக்களே.

இனி, ஏழாவது படத்தைப் பார்ப்போம். இங்கே நான்கு அகர எழுத்துக்களையுடைய இரண்டு தொகுதிகளுள. முதலில் நிற்கும் நான்கு அகரங்கள் பத்துப் பிரிவுகளாகவும், இரண்டாவது நிற்கும் நான்கு அகரங்கள் பதின்மூன்று பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டு, முறையே "அரிசுவடி," "நூல் மரபு" என்ற சொற்களைப் பயக்கின்றன. தமிழ்மொழியிலுள்ள வேறெல்லாச் சொற்களைக் காட்டிலும் இம்மொழிகள் தனிப்பெருஞ் சிறப்பின. இது பின்னர்க் கூறப்படும். ஈண்டு, இவ்விரண்டு சொற்றொடர்களும் பஞ்சாக்ஷரத்தைப் போலவே ஐந்தெழுத்துக்களுடையன வென்பதைக் குறித்தல் சாலும். நான்கு அகர வெழுத்துக்களிலிருந்து "அரிசுவடி" "நூல் மரபு" என்ற இரு வேறு சொற்களுந் தோன்றுகின்றன. நான்கு பிரணவ எழுத்துக்களிலிருந்து வேதங்கள் பிறந்தன வென்பர். நான்கு பிரணவ எழுத்துக்களிலிருந்து வேதங்கள் வந்தன வென்பதற்கும், நான்கு அகர எழுத்துக்களிலிருந்து மேற்குறித்த இரண்டு சொற்றொடர்களும் பிறப்பதற்குமுள்ள ஒற்றுமையை நீங்கள் கவனிக்கவேண்டும். "அரிசுவடி"யிலும், "நூல் மரபு" என்ற தொல்காப்பியப் பகுதியிலும் விளக்கப்படும் பொருள் தமிழ் எழுத்துக்களே. தமிழ் எழுத்துக்கள் இவ்விரண்டிலும் நான்கினங்களாக வகுக்கப்படுகின்றன: உயிரெழுத்து அல்லது ஜீவாத்மா எழுத்துக்களென்பது ஓரினம்; மெய்யெழுத்து அல்லது மாயை எழுத்துக்களென்பது மற்றொன்று; உயிர்மெய் யெழுத்து அல்லது ஜீவாத்மா மாயையிற் புகுந்து நிற்கு மெழுத்துக்கள் என்பது மூன்றாவது இனம்; நான்காவது, மாறாத ஒரெழுத்து என்று பொருள்படும் 'தனிநிலை' அல்லது "ஆய்தம்". இது குறித்து விரிவாய்ப் பின் கூறுதும்.

மூலையெழுத்து அல்லது பிரணவமாகிய ஓகரம் பல்வேறு வகையில் உருமாறி மூலமந்திரங்களையும் இறுதியிற் கூறிய இரண்டு சொற்றொடர்களையுந் தோற்றுவிப்பதை விளக்கும்.

இப்பகுதியை முடிப்பதற்கு முன், ஈண்டு நாம் கண்டவற்றில் முக்கியமானவற்றைத் தொகுத்துக் காட்டுதும்.

கீழ்ப் பகுதியை நூற்றெண்பது டிக்கிரி சுழலச் செய்வதால் ஒகரம் அகரமாக மாறும். இங்ஙனந் தோன்றும் அகரத்திலிருந்து வேறு எழுத்துக்கள் பிறக்கின்றன. பிறவெழுத்துக்கள் பிறப்பதற்கு நிலைக்களமாயுள்ள அகரத்தின் வடிவமும் அளவும் ஒன்றே. (வெவ்வேறெழுத்துக்கள் பிறப்பதன் பொருட்டு அதன் வடிவத்தையும் அளவையும் நாம் யாண்டும் மாற்றவில்லை.) அகரத்தைப் பகுதிகளாக்குவதிலும் அதன் உருவத்தைச் சிதைக்காமல், அதன் வளைவுகளுக்கிணங்க வகுத்திருக்கிறோம். மூலமந்திரங்களும் இறுதியிற் குறித்த இரண்டு சொற்றொடர்களும் எழிலமைந்த வடிவங்களையுடைய எழுத்துக்களா லமைந்திருக்கிறன. ஓரெழுத்து இரட்டித்து வருமாயின், முதலெழுத்து அகரத்தின் எப்பகுதிகளாலாயதோ, அப்பகுதிகளாலேயே இரண்டாவது எழுத்தும் அமைகின்றது. பகுதிகளின் தொகையும் எழுத்துக்களும் மூலமந்திரங்களைப் பற்றிய புராணக் கதைகளைக் குறிப்பனவா யிருக்கின்றன. மாற்றி யமைக்கப்பட்ட எழுத்துக்களின் வடிவம் அவ்வெழுத்துக்களின் மறைபொருளைக் காட்டுகின்றது. மந்திரங்களும் சொற்றொடர்களும் குறைந்த அகரப்பகுதிகளாலாயவை. இப்பகுதிகளின் தொகையை இன்னும் குறைக்க முயல்வது வீணாகின்றது.

மந்திரங்களையும் சொற்றொடர்களையும் உண்டாக்குவதில் எடுத்துக்கொண்ட அக்ரங்களின் எல்லாப் பகுதிகளும் பயன்படுத்தப்படுகின்றன. வேறு எல்லாத் தமிழ்ச் சொற்களும் இவ்வாறே அகரப் பகுதிகளினின்றும் பெறப்படுதல் கூடுமாயினும், எடுத்துக்கொண்ட அகர எழுத்துக்களின் எல்லாப் பகுதிகளையும் ஒன்றையும் விடாமல் உபயோகித்துக் கொள்ளக்கூடிய சொற்கள் மிகமிகச் சிலவே. ஈண்டுக் கூறியதனுண்மையைச் சோதித்துப் பார்த்தறிந்து கொள்க.

ஈண்டெடுத்துக் காட்டிய ஒற்றுமைகள் எதிர்பாராத வகைகளில் நிகழ்வனவே யன்றி இவற்றில் ஒழுங்கும் முறையுமில்லை என்போமாயின், அது பெரிதும் வியத்தற்குரிய தொன்றாகும். ஏனெனின், அறிவின் எத்துறையிலும் இத்தகைய நிகழ்ச்சி காணலரிதாகலின் என்க. இதுகாறுங் கூறிய ஒற்றுமைகள் இன்னும் நாமெடுத்துக் காட்டக்கூடிய ஒற்றுமைகளின் ஒரு சிறு பகுதியே யாகும். காலமின்மை பற்றியும் வேறுகாரணங்களாலும் விரிவா யிவற்றை ஈண்டுக் கூறாது விடுத்தேன்.

502

# ஆராய்ச்சிப் பகுதி : Research

## திராவிடக் குழு *

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

இந்தியப் பெரு நாட்டிலுள்ள மக்கட் டொகுதியை ஆராய்ச்சி முறையில் வகுத்து இனம் பிரித்துப் பொதுவியல்பு சிறப்பியல்புகளை வரையறைசெய்ய முயன்ற ஆராய்ச்சியறிஞர்கள் அஃது எழுவகைத்தாய குழூஉக்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும் என்று முடிவுகட்டினர். அவை வருமாறு:—

†(1) துருக்க ஐரானியர் (2) இந்திய வாரியர் (3) சைத்திய திராவிடர் (4) ஆர்ய திராவிடர் அல்லது இந்துஸ்தானி (5) மங்கோலிய திராவிடர் (6) மங்கோலாய்ட் (7) திராவிடர்.

அவ்வேழனுள் இறுதியதாயுள்ள திராவிடர் என்ற குழுவினர் ஒரு காலத்தில் [1]இலங்கைத்திட்டுதொட்டுக் கங்கையாற்று வெளிகள் வரையிற் பரவி வாழ்ந்து வந்திருந்தனர் என்று பொதுவாகத் தெரிகிறது. சிறப்பாகச் சென்னைப் பெரும் பிரிவிலும், ஐதராபாத் பகுதியிலும், [2] மத்திய மாகாணங்களிலும் [3]சோட்டா நாகபுரியிலும் அவர்கள் பெருந் தொகுதியினராக நிறைந்து வாழ்ந்திருந்தார்கள் என்று அறியக் கிடக்கின்றது. இப்பெருங் குழுவினரின் குழூஉச் சிறப்பியல்புகளை இக்காலத்தில் மலையாள நாட்டிலுள்ள [4]பணியர்களிடத்திலும், சோட்டா நாகபுரியிலுள்ள [5]சண்டாளர்களிடத்திலுங் காணலாம். திராவிடக் குழுவினர் உயரத்திற் குறைந்த உருவினர்களே ; ஏனைய இனத்தினரை நோக்க இவர்களைக் குள்ளர்கள் என்றே கூறலாம். நிறமோ தீர்ந்த கறுப்பில்லாவிட்டாலும் கறுப்பென்றுதான் கூறல்வேண்டும். இவர்களுடைய தலைமயிர் கறுத்துச் செழித்து வளர்ந்து சுருளும் பண்புடையது. கரிய கண்கள் ; நீண்ட தலை ; மூக்கோ முனையகன்றும், அடிப்பகுதி

---

* இக்கட்டுரை "தி இம்பீரியல் கெஸட்டீயர் ஆஃப் இந்தியா" என்ற அரசாங்கத் தொகுப்புநூலிற் கண்ட கருத்துக்களைத் தழுவி யெழுதப்பட்டதாகும்.

† Turko-Iranians, Indo-Aryan, Scytho-Dravidian, Aryo-Dravidian or Hindustani, Mongolo—Dravidian, Mongoloid, Dravidian.

1. Ceylon Island. 2. Central Provinces. 3. Chota-Nagpur. 4. Pan iyans. 5. Santals.

சிறுபான்மை எடுப்பில்லாது தட்டையாகவும் இருக்கும்; முன்னங்கைகள் சற்று நீண்டனவாகவே யிருக்கும்.

இந்தியாவிலுள்ள மற்றைக் குழுவினரையும் நோக்க, இக் குழுவினரே தொன்மை மிகுந்த பழங்குடிகள் என்று அறியக் கிடக்கின்றது. [1] சில நூலார் மிகவுந் தொன்மைக்குக் காட்டாகக்கூறும் மலைப்பகுதிகளிலும், மேடான நிலப்பகுதிகளிலும், மற்றும் விந்தியமலை முதல் கன்னியாகுமரி வரையிற் பரந்து கிடக்கும் நிலப்பகுதியிற் பற்பல விடங்களிலும் இக் குழுவினர் காணப்படுகின்றனர். தென்னிந்தியாவின் கீழ்க்கரை மேற்கரையாகிய இருகரைகளிலும் தொடர்ந்து வளர்ந்துள்ள கிழக்குத் தொடர்ச்சி, மேற்குத் தொடர்ச்சியென்ற மலைகள் இரண்டிலும் வாழ்வோரெல்லாம் திராவிடர்களே; அவ்வாறே வடக்கே [2] அராவலி மலைகளிலும், [3] இராஜமஹால் மலை நாடுகளிலும் வாழ்வோரும் திராவிடர்களே யாவர். இடையிடை நேர்ந்த ஆரியர்கலப்பினாலும், மங்கோலியர்கலப்பினாலும், இக் குழுவினர் தம் குழுச் சிறப்பியல்புகளிற் பலவற்றை இக் காலை யிழந்திருக்கின்றனர்; எனினும் ஆராயப்புகுவோர் எளிதில் வேறு பிரித்துக் காணக்கூடிய சிறப்பியல்புகள் இன்னும் வாய்ந்தேஇருக்கின்றனர்.

திராவிடர்கள் என்றால் உழைப்பாளிகள் அல்லது தொழிலாளிகள் என்றே பொருள் கொள்ளலாம்; என்னை? மெய் வருந்திப் பாடுபட்டுப் பொருளீட்டி, வாழ்வது அவர்களுக்கே சிறப்பாக உரித்தாகலின். வடகோடியிலுள்ள [4] அஸ்ஸாம் நாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் மாக்களைப்போல் உழைக்க வேண்டுமானாலுஞ் சரி; வங்காளத்தைச் சேர்ந்த [5] சதுப்பு நிலங்களில் மாடுபோலுழைத்துக் சாகுபடி செய்ய வேண்டுமானாலுஞ்சரி; கல்கத்தா, இரங்கோன், சிங்கப்பூர் போன்ற தலைநகரங்களில் [6] தெருப்பெருக்கிக் குப்பை கொட்ட வேண்டுமானாலுஞ்சரி; மற்றித்தகைய உடல் வருத்தும் கீழ்த்தரமான வேலைகள் எதுவாயினுஞ்சரியே, அவற்றிற் கெல்லாம் ஈடு கொடுத்துப் பாடுபடுபவர்கள் திராவிடர்களே. கரிய நிறம் வாய்ந்து, திண்ணிய உடற்கட்டுடனும், தட்டையா யகன்று [7] நீக்ரோவர் தம் மூக்குகளை யொத்த மூக்குகளோடுங் காணப்பட்டு மெய்வருந்திப் பாடுபடுவதே தொழிலாகக் கொண்டு வந்திருந்தவர்களெல்லாம் திராவிடர்களே என்று எளிதிற் கூறிவிடலாம்.

---

1. Geologists. 2. Aravallis. 3. Rajmahal. 4. Assam. 5. Swamps. 6. Scavenging. 7. Negroes.

## குழுவரையறை துணிதலியலாது

குழுவின ஆராய்ச்சியையே அடிப்படையாகக் கொண்டு மேற்பிரித்துக் காட்டியவாறு ஏழு இனத்தினராகவோ அதற்குக் கூடுதற்குறைவான தொகையுள்ள இனத்தினராகவோ பிரித்தும், இந்தியப் பெருநாட்டின் இன்னின்ன பகுதிகளில் இன்னின்ன இனத்தார்தான் வாழ்ந்துவந்தனர் என்று வரையறுத்துங் கூறுதல் என்பது இயலாது. சென்னைப்பகுதியிலுள்ளவர்களெல்லாம் திராவிடர்களென்றோ, அன்றி, வங்காளத்திலுள்ளவர்களெல்லாம் மங்கோலிய திராவிடர்களென்றோ நூல் பிடித்ததுபோல் வகுத்துக் கூறிவிடத் துணிதல் அறியாமையேயாகும். பண்டு தொட்டே இந்திய நாட்டில் வடபகுதியிலிருப்போர் தென்பகுதிக்கும், மேலைப் பகுதியிலுள்ளோர் கீழைப்பகுதிக்கும் சென்றடைந்து வந்தமை வரலாற்றுண்மையாகும். இவ்வாறு இடம் பெயர்ந்து சென்றோர் வணிகர்களாகவோ, விறல் மன்னர்களாகவோ, நிலக்கிழவர்களாகவோ இன்றேல் பூசாரிகளாகவோ குடிபுகுந்துறைந்து தம் குழூஉச் சிறப்புகளில் தலையாயவற்றை வழுவவிடாமற் காத்துப் பெருமையாகவும் இயன்றவரையில் தனியாகவுமே வாழ்ந்துவர முயன்றுவந்துளர். எனினும், ஆங்காங்கு ஒரு சிலர் தம் குழூஉச்சிறப்பியல்புகளை அறவே யொழித்துச் சேர்ந்த நாட்டினரோடு எவ்வாற்றானும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்து வந்திருத்தலுங் கூடும். ஆகவே, மேற்கண்ட பிரிவுவகை ஆராய்ச்சிக் கருவிகளாகக் கொண்ட பொதுப்படையான அளவு கோல்களேயாகும்.

## திராவிடக்குழுவினரே முதுகுடிகள்

இனி, திராவிடர்களுடைய குட்டை உருவமும், கறுத்த தோலும், நீண்ட தலையும், அகன்ற மூக்கும், சற்று நீண்ட முன்கையும் அவர்களை ஏனைக்குழுவினர்களினின்றும் வேறு பிரித்துக் காட்டுவனவாகுமென்று மேற்கூறினோம். இக்குழூஉச்சிறப்புக்களையே துணையாகக்கொண்டு, [1]ஹக்ஸ்லி என்பார் [2]ஆஸ்திரேலிய நாட்டு முதுமக்களுடன் தொடர்பு பூண்டவர்களே திராவிடர்கள் என்று கூறிய கூற்றுக்கு அரண்கோல ஒரு சிலர் முயல்வர். [3]முண்டாரி மொழிக்கும் ஆஸ்திரேலிய மொழிகள் சிலவற்றிற்கும் எண் முறையில் காணப்படும் சில ஒற்றுமைகளையும், தென்னிந்தியாவில் மாய்ந்து மறையும் நிலையிற் காணப்படும் [4]வளைதடிகளின் வேறுபாடுகளையும் அவர் தம் கூற்றுக்கு உறுதுணையாக் கொள்வர்.

---

1. Huxley, 2. Australia, 3. Mundari, 4. Boomerang.

[1]மடகாஸ்கர் திட்டிலிருந்து [2]மலேயா திட்டுக்கள் வரையிற் பரந்து கிடந்து, இந்திய நாட்டை [3]ஆப்பிரிக்காவுடனும், ஆஸ்திரேலியாவுடனும் இணைத்திருந்த பெருநிலப் பகுதியாகிய [4] இலெமூரியா என்றொன்று இருந்ததென்றும் அப்பகுதியில் வாழ்ந்தவர்களே திராவிடர்களென்றும் [5] ஸ்க்ளேட்டர் என்பார் ஊகத்தாற்கூறிய கொள்கையோடு தொடர்புபடுத்த மற்றொரு சாரார் முயல்வர்.

எனினும் ஆஸ்திரேலியப் பண்டை மக்களின் மண்டையோடுகளையும், பண்டைத் திராவிட மக்களின் மண்டையோடுகளையும் ஒப்புநோக்கி ஆராய்ச்சிசெய்த [6]ஸர் உவில்லியம் டர்னர் என்ற அறிஞர் அவ்விருதிறத்தினரும் ஓரினத்தினர் என்று கொள்வதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். அவருடைய கூற்றிலிருந்து, [7]அந்தமான் திட்டுக்களிலும், [8]பிலிப்பைன் திட்டுக்களிலுமுள்ள நீக்ரோவரினத்தைச் சேர்ந்தவர்களுடன் திராவிடர்களை ஒன்றுபடுத்துவதும் முடியாதாகின்றது. டர்னரின் முடிபுகள் இவ்வாராய்ச்சித் துறையில் முடிந்த முடிபுகளாகவே கருதப்படுகின்றன.

அவ்வாறுகருதப்பட்டாலும், [9]ஸர் உவில்லியம் ஹண்டர் என்றபேரறிஞர், திராவிடர்கள் இருகிளையினர் என்றும், முண்டாரிமொழித்தொகுதியைச்சேர்ந்த திருந்தா மொழிகளைப் பேசிய [10]கோலேரியர் என்பவர் ஒருகிளையும், தமிழ்மொழித் தொடர்புடையமொழிகளைப் பேசிய [11]உண்மைத் திராவிடர் மற்றொரு கிளையுமாவர் என்றும் ஆராய்ந்து புதியதொரு கொள்கையைப்பின்னர் நிறுவியுள்ளார். மேலும், கோலேரியக் கிளையினர் இந்தியாவிற்குள் வடகீழ்ப்பகுதியூடு வந்து விந்திய மலைக்கு வடக்கிலுள்ள மேட்டு நிலப்பகுதியிற் றங்கியவர்களென்றும், பின்னர் இந்தியாவின் வடமேற்பகுதியூடு பஞ்சாபிற் புகுந்துவந்த திராவிடர்களால் அவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்களென்றும், இத்திராவிடர்களே தெற்கு நோக்கித் தொடர்ந்து முன்னேறிவந்து தங்கினார்களென்றும் அவர் கூறுவர். [12]பலுச்சிஸ்தானத்தில் வழங்கும் [13]வராகிமொழிக்குந் தென்னிந்தியாவில் வழங்கும் மொழிகளுக்கும் தொடர்புள்ளதென்று ஐயுறுதற்கிடனிருப்பதையும், சோட்டா நாகபுரியிலுள்ள மக்கள்பால் மங்கோலியக் குழுவினர்க்குரிய சில குழூ

1. Madagascar, 2. Malay Archipelago, 3. Africa. 4 Lemuria. 5. Sclater. 6. Sir William Turner. 7. Andamans. 8. Philippines. 9. Sir William Hunter. 10. Kolarians. 11. Dialects, 12. Baluchistan. 13. Brahui.

உச் சிறப்புகள் காணப்படுவதையுமே ஆதாரமாகக்கொண்டு இக்கூற்று எழுந்ததாகும். இவ்வடிப்படைதானும் நொய்தான வலுவற்றதொன்றன்றென்று கூறவும் வேண்டுமோ? அன்றியும் மொழி வேற்றுமை ஒற்றுமைகளையே கருவியாக்கொண்டு ஓரினத்தாரைக் கோலேரியரென்றோ, திராவிடரென்றோ இரு பிரிவினராகப் பிரிக்க முயல்வது அறிவியன் முறைக்கு ஒவ்வாததொன்றாகுமன்றோ? இருதிறத்தினரின் உடலமைப்புகளில் எத்தகைய தீர்ந்த வேறுபாடுகளுங் காண்டற்கில்லையாதலின் மேற்குறித்த கொள்கையை யேற்றுக் கோடலரிதாகின்றது. அதுவுமன்றி, மஞ்சள்நிற மேனியும், பெரிய தலைகளும் வாய்ந்த மக்கட்குழுவினரே வதிந்து வரும் நிலப்பகுதியொன்றிலிருந்து, கருநிறமும், நீண்ட தலையமைப்புமுடைய ஒரு பெருங் கூட்டத்தினர் புறப்பட்டு வந்தனர் என்பது நம்பத்தக்கதொன்றாமோ?

எனவே இமயத்திற்கு அப்புறமிருந்து திராவிடர்கள் இந்தியாவிற்குள் வந்திருத்தல் வேண்டுமென்று கொள்ளும் கொள்கைகளுக்கு அறிவியன் முறைப்படி நம்பத்தக்க எத்தகைய ஆதாரமுமிருப்பதாகத் தோற்றவில்லை. இந்தியாவில் இந்நாளிலும் திராவிடர்கள் வாழ்ந்து வருவதாகக் கொள்ளப்படும் நிலப்பகுதிகளின் இயற்கை யமைப்பையும், அவர்களுடைய தனிப்பட்ட பண்டைய உடலமைப்புக் குறிகளையும், [1] உயிருண்மை தெரிக்கும் அவர்களுடைய சமயத்தையும், சிறப்பியல்பு பொதுளும் மொழிகளையும், கற்றச்சு வேலைகளையும், தொன்மைக் கறிகுறியான [2] குல தெய்வ வழிபாட்டையும் நோக்கினல் அவர்கள்தாம் இந்தியாவின் முதுகுடிகள் என்று கொள்வதே சிறப்புடைத்தாகும்.

---

## பிழை திருத்தம்

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-கச பரல்-அ. யுவ-பங்குனி

பக்கம் 357—உணர்ந்த மாமுனிவர் என்ற முதற்குறிப்புத் திருவாசகப்பாட்டின் பதவுரை இரண்டாவது வரி.

| பிழை | திருத்தம் |
|---|---|
| உணர்ந்து | உணராது |

பக்கம் 359—ஷை விளக்கவுரை ௩௨-வது வரி.

| பிழை | திருத்தம் |
|---|---|
| நீங்கினன் | நீக்கினன் |

1. Animistic religion. 2. Totemism.

507




## சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

### ஐந்தாஞ் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.

பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது.

(சிலம்பு-௧௪ பரல்-௧: ௪௩௪-வது பக்கத்தொடர்ச்சி)

19. இனி முதல்வன் ஆன்மாவுக்கு விடயங்களை உணர்த்த ஆன்மா விடயங்களையறிந்து நுகரும் என்பது பற்றி வழி நூலாசிரியர் அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் தாமியற்றிய சிவஞான சித்தியாரில் அடியில் வருமாறு கூறுகின்றார்: "உலகவனுருவமாக யோனிகளுறுப்பதாக விலகு பேரிச்சா ஞானக்கிரியையுட் கரணமாக அலகிலாவுயிர்கட்கெல்லாம் அறிவினையாக்கி யைந்து நலமிகு தொழில்களோடு நாடக நடிப்பனாதன்." இச்செய்யுள் முதல்வன் உயிர்கள் பொருட்டு உயிர்களில் இச்சை அறிவு செயல்கள் நிகழும் வண்ணம் அவற்றை விளக்கி உயிர்களுக்கு உணர்த்தும் அதிசூக்கும வைந்தொழிலைக் கூறுகின்றது. ஐந்தொழில் தூலவைந் தொழில், சூக்குமஐந்தொழில், அதிசூக்குமஐந்தொழில் என மூவகைப்படும். அவற்றுள் தூலவைந்தொழில் என்பது முதல்வன் உலகத்தைத் தோற்றுவித்து நிறுத்தி ஒடுக்குதலாகும். மறைப்பு அருள் என்பன முதல்வன் அவ்வுலகிலுள்ள உயிர்களுக்குக் கட்டினையும் வீட்டையும் அளித்தலாகும். இத் தூலவைந்தொழில் இரண்டாவது சூத்திரத்தில் "அவையே தானேயாய்" என்பதனாற் கூறப்பட்டது. சூக்கும வைந் தொழிலாவது முதல்வன் உலகத்தைச் சங்கரித்து ஒடுக்கிய பின் மேற் செய்யக்கடவதாகிய தூலவைந்தொழிற்கு யோக்கியமாம்படி உயிர்களுக்குக் கேவலநிலையில் நிகழ்த்துவது. அதிசூக்கும வைந்தொழிலாவது உலகிலுள்ள உயிர்களுக்கு இச்சை அறிவு செயல்கள் நிகழும் பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு வேறாயும் ஒன்றாயும் உடனாயும் அத்துவிதமாய்க் கலந்துநின்று அவற்றின் இச்சை அறிவு செயல்களைச் செலுத்தி நிற்றலாகும். இந்த அதிசூக்கும வைந்தொழில் இங்கே ஐந்தாஞ்சூத்திரத்தில் "தாந்தமுணர்வின் தமியருள்"

என்பதனாற் கூறப்படுகின்றது. இந்த ஐந்தொழிலில் முதல்வன் உயிர்களுக்குள் உயிராய்நின்று உயிர்களுடைய இச்சை அறிவு செயல்களை நிகழ்த்துவித்தலால் அது அதிசூக்கும வைந்தொழில் எனப்பட்டது. "இலகு பேரிச்சா ஞானக் கிரியைகள்" என்றது முதல்வனுடைய மிக்க விளக்கமுடைய வியாபக இச்சை அறிவு செயல்களைக் குறிக்கின்றது. "இலகு பேரிச்சா ஞானக்கிரியை உட்கரணமாக" என்றதனால் முதல்வன் ஒவ்வொரு உயிரினுள்ளும் அந்தரியாமியாய் நின்று, அதன் இச்சை அறிவு செயல்களைச் செலுத்தி நிற்றலும் "யோனிகள் உறுப்பதாக" என்றதனால் முதல்வன் ஒவ்வொரு உயிரும் பிறஉயிர்களோடு நிகழ்த்திவரும் இச்சை அறிவு செயல்களைச் செலுத்திநிற்றலும் "உலகவனுருவமாக" என்றதனால் முதல்வன் ஒவ்வொரு உயிரும் உலகில் நிகழ்த்தி வரும் இச்சைஅறிவு செயல்களைச் செலுத்திநிற்றலும் குறிக்கப்படுகின்றன. "நாடகம் நடிப்பன்" என்றதனால் முதல்வன் அவ்வாறு உயிர்களுக்கு அதிசூக்கும வைந்தொழில் செய்யும் பொருட்டு நடனஞ் செய்தலினால் விகாரமடைவான் அல்லன் என்பது கூறப்பட்டது. உயிர்கள் நுகர்ந்துவரும் ஒவ்வொரு விடயத்திலும் தோற்றம் நிலை இறுதி மறைப்பு அருளல் ஆகிய ஐந்தொழில்களும் மிக நுட்பமாக நிகழ்கின்றன.

20. மக்கள் உலகில் நிகழ்த்தும் எவ்வகை நிகழ்ச்சிகளும் இச்சை அறிவு செயல்களாலே நிகழ்கின்றன. மக்களுடைய தனி வாழ்விலும் எவ்வகைக் கூட்டவாழ்விலும் இச்சை அறிவு செயல்கள் நிகழாமலிருப்பனவல்ல. அவை செவ்விதான முறைமையில் நிகழ்த்தப்படுதலினாலே இன்பமும் அல்லுழித் துனபமும் உண்டாகின்றன. கட்டுநிலையில் உயிர்களுக்கு இச்சை அறிவு செயல்கள் ஏகதேச விளக்கத்துடன் நிகழ்தலினால் ஏகதேச இன்பமாகிய சிற்றின்பமுண்டாகின்றது. உயிர்கள் ஆணவமல மறைப்பினாலுண்டாகும் மயக்க அறிவு நீங்கி இன்பநலம் அடைதல் வேண்டும் என்னும் ஒரே இச்சையையுடைய முதல்வன் மக்களுடைய கட்டுநிலையில் அவரவர் பக்குவமறிந்து பக்குவத்திற்கேற்ப அறிவு செயல்களை விளக்கி உணர்த்தி வருகின்றான். அங்ஙனம் முதல்வன் மக்களுக்கு இச்சை அறிவு செயல்களை விளக்கி உணர்த்தி வருதற்கேற்ப அவர்கள் தங்கள் இச்சை அறிவு செயல்களை நிகழ்த்தி விடய நுகர்ச்சிகள் செய்து ஒழுகுதலானது அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் வழியாயிருக்கின்றது. இக்காலத்தில் உலகில்வாழும் மக்கள் இவ்வுண்மையை அறிந்து ஒழுகாததால் துன்பமும் துயரும் உண்டாகியிருக்கின்றன.

21. மேலே கூறியவாற்ருல் இந்தச் சூத்திரம் முதல்வன் உயிர்களுக்குக் கட்டுநிலையிற் செய்யும் காட்டும் உதவியைக் கூறுகின்றது என்பது புலனும். காட்டு முதவியாவது முதல்வன் உயிர்களோடுங்கலந்து நின்று அவற்றின் இச்சை அறிவு செயல்களை விளக்கி விடயங்களை அறிவித்து நிற்றலாகும். காட்டும் உதவியின்பின் முதல்வனுடைய காணுமுதவி நிகழும். காணுமுதவி என்பது முதல்வன் உயிர்களைச் செலுத்தி நிற்றலுடன் விடயங்களிலுங் கலந்து நின்று அவ்விடயங்களைப் பற்றி நுகரும்படி செய்தலாகும். உயிர்கள் முதல்வனுடைய காட்டுமுதவியையின்றி விடயங்களை அறியமாட்டா. காணுமுதவியையின்றி விடயங்களை நுகரமாட்டா. காட்டுமுதவி உயிர்களிடம் நிகழும்; காணுமுதவி விடயத்தின் கண்ணும் நிகழும். முதல்வன் உயிர்களுக்காகச் செய்யப்படும் இவ்விரண்டு உதவிகளும் நிகழ்ந்தாலன்றி உயிர்கள் தங்கள் இச்சை அறிவு செயல்கள் விளங்கப்பெற்று விடயங்களையறிந்து நுகர்தல் முடியாது. வீட்டு நிலைக்கண் நிகழும் முதல்வனுடைய காணுமுதவி பதினோராஞ் சூத்திரத்திற் கூறப்படும்.

22. மக்களுயிர்கள் தங்கள் கட்டுநிலையில் முதல்வனல் இச்சை அறிவு செயல்கள் விளங்கப்பெற்று விடயங்களை யறிதற்குச் செவி மெய் கண் வாய் மூக்கு என்னும் ஐம்பொறிகளிலொன்றும், மண், நீர், தீ, வளி, வெளி ஆகிய ஐம்பூதங்களிலொன்றும், மனம் அகங்காரம் புத்தி சித்தம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கும், அசுத்தமாயையின் காரியங்களாகிய காலம் நியதி கலை வித்தை அராகம் ஐந்தும் ஆகிய இவை இன்றியமையாது வேண்டப்படுங் கருவிகளாகும். சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தும் இவற்றைச் செலுத்தி நிற்கும் பிரேரககருவிகளாம். இக்கருவிகளின் துணையின்றி மக்கள் கட்டுக்காலத்தில் உலகவிடயங்களை அறிந்து நுகரமாட்டார்.

23. இனி இங்ஙனம் முதல்வன் உயிர்களுக்கு இச்சை அறிவு செயல்களை விளக்கி விடயங்களை அறிவித்து நிற்குங்கால் உயிர்கள் முதல்வனேடு எவ்வாறு நின்று விடயங்களை அறியும் என்னும் உண்மையை ஆசிரியர் ஒருவமையை எடுத்துக்காட்டி விளக்கி உணர்த்துகின்ருர். வெளியில் விளங்கும் நாண் மீன்கள், ஞாயிற்றின் ஒளியின் வேருய்த் தோன்றுதலும் அதனேடொன்ருய் விரவியொழிதலுமின்றி அவ்விரண்டிற்கும் பொதுமையில் அஞ்ஞாயிற்றின் ஒளியில் அடங்கி அதனுடனுய் விளங்கியொளிர்தல்போல, உயிர்கள் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்துந் தீண்டியுமறியப்படும் ஐவகை

விடயங்களையும் முதல்வன் அறிவிக்க, உயிர்கள் அவனின் வேறுதலுமொன்றுதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுமையிலடங்கி அவனுடனாய் நின்று அவ்விடயங்களை அறியும்.

24. ஆசிரியர் கூறியவற்றைக் கேட்ட மாணவர்கள் தங்கள் உள்ளத்தில் ஐயப்பாடின்றி உண்மை விளங்கவில்லை என்று கூறி அவரைக் கேட்கின்றனர். "அடிகளே முதல்வன் திருவருள் (திரோதான சத்தி) உணர்த்த உயிர்கள் உணர்ந்து விடயங்களை நுகருமன்றித் தாமே விடயங்களை அறிந்து நுகரமாட்டா என்று தாம் கூறிய உண்மையை நாங்கள் மனங்கொள அறிந்தோம். ஆனால் முதல்வன் உயிர்கட்கு உணர்த்தும் வழி எல்லா உயிர்கட்கும் எக்காலத்தும் உணர்வு ஒப்பநிகழாது, உயிர்கடோறும் பல்வேறு வகைப்பட தாம்தாம் செய்த வினைக்கேற்ப உணர்வு நிகழும் என்று சொன்னீர். பல்வேறு உயிர்கட்கும் பல்வேறுவகைப்பட உணர்வு நிகழவேண்டுமானால் முதல்வன் அவ்வுயிர்கட்கு உணர்த்தலும் பல்வேறு வகைப்பட்டதாயிருத்தல் வேண்டும். அப்படியானால் முதல்வன் உயிர்கட்கு இச்சை அறிவு செயல்களை விளக்கி உணர்த்துதலில் உணர்த்தப்பட்ட உயிர்கள் போல விகாரமடையான் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. மேலும் இவ்வுண்மையை விளக்குதற்காக நீர் ஞாயிற்றின் சந்நிதியில் தாமரை ஒன்று மொக்குளாதலும் ஒன்று அலர்தலும் ஒன்று மலர்தலும் ஒன்று கூம்புதலுமாகிய பல்வேறு வகைப்பட்ட தொழில்கள் நிகழ்தலை உவமையாகக் கூறினீர். சந்நிதி என்ற சொல்லுக்கு அபிமுகமல்லாமல் சிவசத்தி அவ்வக்காரியத்தில் உள்முகமாதலாகிய சங்கற்பம் என்றுஞ் சொன்னீர். இந்த உவமையில் ஞாயிறு இச்சை அறிவு செயல்களை உடையவனல்லன்; அல்லானுயின் முதல்வனும் இச்சை அறிவு செயல்களை உடையவனல்லன் என்று நாம் கொள்ளல்வேண்டும். அவ்வாறு கொள்ளுதல் முதல்வனுடைய இச்சை அறிவு செயல்களினாலே உயிர்கட்கு இச்சை அறிவு செயல்கள் நிகழுகின்றன என்று நீர் முன் சொன்ன உண்மைக்கு முரணுதலாயிருக்கின்றது. இந்த ஐயப்பாடுகளை நீக்கி எங்கள் உள்ளத்தைத் தெளியச் செய்தல் வேண்டும்."

25. மாணவர் கூறின ஐயப்பாடுகளை நீக்குவான் ஆசிரியர் கூறுகின்றார். மாணவர்காள்! நீங்கள் உங்கள் அநுபவத்தில் வைத்து ஒப்பிட்டுப்பார்த்துப் பல்வேறு உயிர்களும் தம்தம் வினைக்கேற்பப் பல்வேறு வகைப்பட உணர்தலுக்கு முதல்வனும் பல்வேறுவகைப்பட உணர்த்தி விகாரமடைவான் என்று கூறுகிறீர்கள். நீங்கள் பொருள்களை ஒன்றன்

பின்னொன்றாயறிதல் போல முதல்வன் அறிவானல்லன்; அவன் எல்லாப்பொருள்களையும் ஒருசேர ஒருங்கே அறியும் பேரறிவுடையன்; அதுவல்லாமல் அவன் உங்களைப்போல் செயல்களைக் கருவி கரணங்களாற் செய்வானல்லன். "இன்ன செயல் இவ்வாறு ஆகுக" என்ற அவனது சங்கற்பமே செயலை நிகழ்விக்கும்படி செய்கின்ற பேராற்றலுடையவன்; அவன் இச்சையாகிய பேரிரக்கமும் சங்கற்பமும் செயலும் இடையீடின்றி உடனே நிகழும். ஆதலின் பல்வேறு உயிர்கட்கும் பல்வேறு வகைப்பட உணர்வுநிகழும்படி செய்தலினால் முதல்வன் யாதொரு விகாரமும் அடையான் என்பதற்கு இழுக்கில்லை என்று அறிவீர்களாக. ஞாயிற்றினுவமை ஒருபுடை உவமையே அன்றி முற்றுவமைஅன்று; ஞாயிறு யாதொரு விகாரமுமடையாமல் நின்றாங்கு நிற்ப தாமரைக்குப் பல்வேறுவகைப்பட தொழில்கள் நிகழ்தல்போல முதல்வன் யாதொரு விகாரமுமடையாமல் நிற்பப் பல்வேறு உயிர்கட்கும் பல்வேறு வகைப்பட இச்சை அறிவு செயல்கள் நிகழ்தலை விளக்குதற்கே ஞாயிற்றினுவமை கூறப்பட்டது. ஞாயிற்றினுக்கு இச்சை அறிவு செயல்கள் இல்லாதிருத்தல் போல் முதல்வனுக்கும் இச்சை அறிவு செயல்களில்லை என்பது கருத்தன்று. இங்ஙனம் முதல்வன் உயிர்களுக்குப் பல்வேறு வகைப்படச் செய்யுமிந்தக் காட்டுமுதவியை தன்னோடு எப்பொழுதும் பிரிப்பின்றி நிற்கிற சத்தியோடியைந்து நின்று செய்கிறான். அவன் உயிர்கட்கு ஐந்தொழில் செய்யுங்கால் சத்தி என்று கூறப்படுகின்றான். முன்னே இரண்டாவது சூத்திரம் நான்காவது அதிகரணத்தில் நாம் கூறியபடி சிவமும் சத்தியும் ஞாயிறும் ஞாயிற்றினொளியும் போல் ஒரு பொருளுமல்லாமல் இரண்டு பொருள்களுமல்லாமல் ஒன்றாதற்கு மிரண்டாதற்கும் பொதுவாய்ப் பிரிப்பின்றி எவ்விடத்தும் வியாபகமாய் உயிர்களுக்குள் உயிராய் நின்று அடிமைகளாகிய உயிர்களுக்கு இச்சை அறிவு செயல்களை விளக்கி உணர்த்தி அருள் செய்யும் இவ்வுண்மை அருட்கண்ணுடையவருக்கு அன்றி ஆராய்ச்சிக் கண்ணுடைய உங்களுக்கு இப்பொழுது நன்கு விளங்காது. ஆராய்ச்சியில் ஏகதேசமாய் விளங்குகிற இந்த உண்மையானது உண்மை அதிகாரத்திற் கூறப்படுகிற சாதனங்களை நீங்கள் அநுட்டித்து அவற்றின் பயன்களாகிய இருள் நீக்கமும் அதனுடன் ஒளி விளக்கமும் பசுத்துவ நீக்கமும் அதனுடன் அருள் விளக்கமும் அடையும்பொழுது உங்களுக்கு முற்றுந் தெளிவாய் விளங்கும்.

512

# அறிக்கை க.

நமது சங்கம் கலைச்சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஆக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. அதன் முதற்படி இப்போது வெற்றியாக நிறைவேறியுள்ளது. சங்கத்தின் சொல்லாக்கக் கழகம் திருநெல்வேலியில் நாற்பத்தொருநாட்கள் இசைத்தமிழ்ச் செல்வர் திரு. தீ. இலட்சுமணப்பிள்ளையவர்கள் பி. ஏ., தலைமையில் மாநாடு கூடி 1. பூதநூல் (Physics), 2 இயைபு நூல் (Chemistry), 3. கணக்கு (Mathematics), 4. இயற்கை நூல் (Natural Science), 5. உடலியலும் நலவழியும் (Physiology & Hygiene), 6. தரை நூல் (Geography), 7. வரலாறு முதலியன (History etc.), ஆகிய கலைகளுக்குச் சொற்களை அமைத்திருக்கிறது.

சங்கம் வரும் 1936 செப்டம்பர் மாதத்தில் சென்னையில் ஓர் மாநாடு கூட்ட ஏற்பாடு செய்துவருகிறது; அதில் புலவர்களையும் ஆராய்ச்சியாளரையும் கூட்டி அச்சொற்களை மறுபடி ஆராய்ந்து முடிவு செய்யப்போகிறது. மாநாட்டுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேராசிரியராக இருந்த உயர்திரு. சாமி விபுலானந்தர் B.Sc., அவர்கள் தலைமைதாங்க அன்புடன் இசைந்திருக்கிறார்கள்.

இப்போது அமைத்துள்ள கலைச்சொற்கள் அச்சாயிருக்கின்றன. பற்றுடையாருக்கு அவை அனுப்பப்பெறும். அவைகளை ஆராய்ந்து, ஒப்புக்கொள்ளக்கூடிய திருத்தங்களை அனுப்புகிறவர்களில் முதன்மையானவர்களுக்குத் தக்க பரிசுகள் கொடுக்கப்பெறும். திருத்தங்களை தாது௵ ஆவணி௴ 12-க்குள் (16-8-1936) அனுப்புதல் வேண்டும்.

மாநாட்டின் அறிக்கைகள் தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிலையங்களுக்கும், அறிஞர் சங்கங்களுக்கும், புலவருக்கும் அனுப்பப் பெறும். பள்ளிக்கூட ஆசிரியரும், கல்வியாளரும் இவ்வியக்கத்திற் பற்றுடையாரும் மாநாட்டிற் கலந்துகொள்ள வேண்டுகின்றோம். பிற விவரங்கள் அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்த்தாயின் வளர்ச்சியிலும், பள்ளிக்கூடங்களில் தாய் மொழி வழியாகக் கலைப்பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளவர் யாவரும் நமது சங்கத்தின் முயற்சிகளுக்கு இயன்ற துணைசெய்ய வேண்டுகின்றோம்.

கா. சுப்பிரமணியபிள்ளை,
எம். ஏ., எம். எல்.,
தலைவர்.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்.
15—5—1936.

513

# செய்திகளும் குறிப்புகளும் :
# News and Notes

## சென்னைத் திருவள்ளுவர் திருநாள்

சென்னைத் திருவள்ளுவர் திருநாட் கழகத்தினரால் இரண்டாவது ஆண்டு விழா சென்ற 4—6—36 வியாழனன்று மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை திருநாட்கழகத் தலைமைநிலையத்திற் கழக அமைச்சர், துணையமைச்சர்கள், பொருளாளர் உள்ளிட்ட பலர் கூட்டங்கூடி, திருவள்ளுவர் படத்தையும், திருக்குறட் சுவடிகளையும் நன்கலங்கரித்தெடுத்துக்கொண்டு புறப்பட்டு ஊர்வலம் வந்தார்கள். அமைச்சர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் திருக்குறள் கடவுள் வாழ்த்துப்பாக்களையே வாழ்த்தாகச் சொல்ல ஏனையோர் தொடர்ந்து கூறிவந்தமை குறிப்பிடற்பாற்றும்.

பின்னர் ஒருகூட்டத்தினர் மயிலைத் திருவள்ளுவர் கோயிலுக்குச் சென்று அங்கு நடந்த சிறப்பையும் ஏழைகட் குணவளித்த ஏற்பாட்டையும் பார்வையிட்டு வந்தனர். சீரியமுறையில் அக்கோயிலுக்குரிய மேற்பார்வையாளர் செயல் புரிந்து வருவது பாராட்டற்பாலதாகும்.

அன்று மாலை சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் பெரியதொரு கூட்டங்கூடிற்று. மண்டபம் வாழைமரம், அசோகு முதலியவற்றால் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கூட்டத் தலைவர் மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், சொற்பொழிவாளர்கள், ஆகியோரடங்கிய ஒருசிறு கூட்டத்தை நிழற்பட மெடுத்தபின், சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர். அ. சண்முகம் பிள்ளை அவர்கள் கடவுள்வாழ்த்துக் கூறவே அன்றைய நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

திருவள்ளுவர் திருநாட்கழகத்தின் தலைவரான உயர் திரு. திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள் தென்காசித் திருநாள் விழாவிற்குத் தலைமைவகிக்கச்சென்றிருந்தபடியால் துணைத்தலைவர்களில் ஒருவரான திருவாளர் பாரிப்பாக்கம் கண்ணப்பமுதலியாரவர்கள் எழுந்து திருநாட் கழகத்தினரின் வேலையையும் நோக்கத்தையும் பற்றிக் கூறியபின்னர், அன்று

தலைமைவகிக்க வேண்டிய உயர்திரு. மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் பண்புநலங்களைப் பாரித்துரைத்து அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அவர்களைத் தொடர்ந்து திரு. டி. செங்கல்வராயன் பி. ஏ, எல். எல். பி. அவர்கள் ஆங்கிலத்திலும், திரு. பி. கோபால ரத்னம் அவர்கள் தமிழிலும் பேசினார்கள். பின் டாக்டர் அவர்கள் தலைமை இருக்கையில் வந்தமரவே அவருக்கு நிறைந்த கைகொட்டல்களிடையே மாலை சூட்டப்பட்டது.

கழக அமைச்சர் திரு. மயிலை சிவ. முத்துக் குமார சுவாமி முதலியாரவர்கள் தலைவரான டாக்டர் அவர்களுக்குக் கழகத்தின்சார்பாக ஒரு வரவேற்புத்தாள் படித்து, அதனை வெள்ளிப் பேழை யொன்றினுள்ளிட்டுப் பலவகைக் கனிகள் நிறைந்த தட்டொன்றினில் வைத்து அளித்தார்கள்.

துணையமைச்சர்களி லொருவராகிய திரு. மா. பாலசுப்ரமணிய முதலியாரவர்கள் எம். ஏ. கழகத்தின் இரண்டாவதாண்டறிக்கையைப் படித்தார்கள்.

பின்னர் வித்வான் மணி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் திருவள்ளுவர் திருநாட்கழக முதற்றலைவராகவிருந்து காலஞ்சென்ற உயர்திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்களின் பிரிவாற்றாமையைக் குறித்துக் கல்லுங் கரையுமாறுபேசி இரங்கற் றீர்மானம் ஒன்று கொண்டுவந்தார்கள்: அதனை "லோகோபகாரி" ஆசிரியர் பரலி சு. நெல்லையப்பபிள்ளையவர்கள் ஆதரித்துப்பேச, தீர்மானம் முழுமனதுடன் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேறும்போது குழுமியிருந்த அனைவரும் எழுந்து சிறிதுநேரம் நின்றதும், பிரிந்த தலைவர் அவர்களின் உருவப்படம் அச்சடித்த தாள் வழங்கப்பட்டதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கனவாம்.

பின்னர் தலைவர் அவர்கள் எழுந்து திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர் செய்துவரும் வேலையைப் பாராட்டி, அவர்களால் வெளியிடப்பட்டுள்ள 1935-ம் ஆண்டு நினைவு மலரின் அருமை பெருமைகளைப் பலபடப் புகழ்ந்துரைத்தபின் திருக்குறட் பெருமையைப் பற்றிய தமது தலைமை விரிவுரையை நிகழ்த்தினார்கள். (உரைமுழுதும் "செல்வி"யில் தொடர்ந்து வெளிவரும்.)

பின்னர் சென்னைக் கன்னிமாரா நூல்நிலையக்கண்காணிப்பாளர் திரு. ஆர். ஜனார்த்தனம் நாயுடு அவர்கள் திருக்குறள்

எவ்வாறு பிறநாட்டாரால் போற்றப்படுகின்றது என்பதை வியத்தகுவகையில் பேசினார்கள். அதன் பின், பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் "திருவள்ளுவரும் மகளிரும்" என்ற பொருள்பற்றி இனியதொரு சொற்பொழி வாற்றினார்கள். அதன்பின்னர் ஜலகண்டபுரம் ஆசிரியர் திரு. வரதஞ்சைய பிள்ளை அவர்கள் "வள்ளுவரும் சமயபோதமும்" என்றபொருளைப்பற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தினார்கள்.

அதன்பின் தலைவர் தமது முடிவுரை கூறியபின் கழகத்தின் சார்பாக நிறைவேற்றற்கழக உறுப்பினர்களி லொருவராகிய திரு. இரா. சிவ. சாம்பசிவ சர்மா அவர்கள் வாழ்த்துக்கூற, கூட்டம் ஒன்பதரைமணிக்கு இனிது முடிந்தது.

*　　*　　*

## ஆரியர் நாகரிகமும் திராவிடர் நாகரிகமும்

"கடந்த சில ஆண்டுகளாகச்செய்யப்பட்டுவரும் ஆராய்ச்சியின் பயனாய், இந்தியாவிற் புதிதாகப் புகுத்தப்பட்ட ஆரியர் நாகரிகம் அதற்கு முன்னிருந்த திராவிடர் நாகரிகத்தைவிட எவ்வகையினுஞ் சிறந்ததொன்றன்று என்று நன்கு புலனாகின்றது. மோஹன்ஜதாரோ, ஹாரப்பா ஆகிய இடங்களைநேரே சென்று காண்பவர்கள் திராவிடர் நாகரிகச் சிறப்பைக் கண்கூடாகக் கண்டுதெளிவர். அந்நாகரிகத்திலும் குருக்கண்மார்கட்கு ஆதிக்க மிருந்தபோதிலும், சாதித்தொல்லை யென்பது அதன்கண் இல்லை; அந்நாகரிகம் ஒவ்வொரு இந்தியனிடத்துங் காணப்பட்டிருந்தது. அக்காலத்தே கட்டப்பட்டதாகக் காணப்படும் ஒவ்வொரு வீடும் இக்காலம் உயர்ந்த கட்டிடச் சிற்பியென்று கூறிக்கொள்வோ ரெவர்க்கும் திகைப்பையும் வியப்பையும் அளிக்கும். பொது மக்களுக்கும் பொது நலத்திற்கும் ஏற்றது அக்காலத்தைய திராவிடர் நாகரிகமேயன்றிப் பின்னர்ப் புகுந்த ஆரியர் நாகரிகமன்று என்பது வெள்ளிடைமலையாகும்."

—ஸர் ஹரிசிங்க் கோர், எம். ஏ.
டி. லிட்; டி. ஸி. எல்; எல். எல் .டி.
("தி மகாபோதி")

*　　*　　*

இம் மாகாண கவர்னராகிய எர்ஸ்கின் பிரபு இங்கிலாந்திற்கு விடுமுறையிற் செல்கின்றபடியால் அவர் சென்று வருகிறவரையில் சென்னை யரசாங்கச் சட்ட மெம்பரான ஹானரபிள் ஸர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு இந்த ஜூன் திங்கள் 18-ம் நாளிலிருந்து கவர்னராக வேலைபார்த்துவரக் கட்டளை

516



பிறப்பிக்கப் பட்டுள்ளது. தமிழ் மக்கள் சார்பாக ரெட்டியாரவர்களுக்கு நாம் வாழ்த்துக் கூறுகின்றோம்.

* * *

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழாராய்ச்சிக் கழகத்திற்குத் தலைவராகத் திருவாளர். S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L, அவர்களும், பெருஞ் சொற்பொழிவாளராகத் திருவாளர் R. P. சேதுப்பிள்ளை B.A., B.L, அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை பெரிதும் பாராட்டற் குரியதாகும். இவ்விரு பேரறிஞர்களின் ஆதரவில் தமிழ் மொழி நல்வளம் பெற்றுத் தழைத்தோங்கும் என்று நம்புகிறோம்.

* * *

இசைத்துறைத் திலகமாயும், மத்தளத்திலும், கஞ்சிராவிலும் ஒப்பு முயர்வுமற்ற மன்னராயும் விளங்கிய புதுக்கோட்டைத் தமிழ்மகனார் திரு. தட்சிணாமூர்த்திப் பிள்ளை இவ்வுலக வாழ்வு நீத்தமை பெரிதும் வருந்தற்பாலதாம். அப்பெரியாரின் பெயரை மந்திரமெனச் சொல்லி மத்தளத்தை யெடுத்தாலொழிய ஒருவருக்கும் மத்தளப் பயிற்சி வாராதென்று அறிந்தோர் கூறிக்கொள்வதை நாம் கேட்டிருக்கின்றோம் இறந்த பெரியார்தம் குடும்பத்தினர்க்கு எம் ஆற்றொணாத் துயரை யறிவித்துக் கொள்கிறோம்.

---

## சென்னை சைவசித்தாந்த மகாசமாஜமும் கழகமும்

### திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்.

1936-ம் வருடம் ஏப்ரல்மீ 5-ம் நாள் 1111-ம் ஆண்டு பங்குனித்திங்கள் 24-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்குக் கீழரதவீதி கழகமேடையிற் கூடிய நிறைவேற்றக் கூட்ட நடபடிக்கைகள்.

வந்திருந்தவர்கள்

(1) திருவாளர் T. S. கந்தசாமி முதலியார் அவர்கள்
(2) ,, ந. சிவகுருநாத பிள்ளை ,,
(3) ,, M. V. நெல்லையப்ப பிள்ளை ,,
(4) ,, வ. திருவரங்கம் பிள்ளை ,,
(5) ,, பு. சி. புன்னைவனநாத முதலியார் ,,
(6) ,, N. இராமலிங்கம் பிள்ளை ,,

தீர்மானங்கள்

(2) 'சித்தாந்தப்' பத்திரிகையில் நமது சென்னைக் கழக ஏஜண்டைப்பற்றி வெளிவந்துள்ள கட்டுரை படிக்கப்பட்டது. சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியவர்கட்குச் சென்னை ஏஜண்டு அவர்கள் செய்த குற்றம் இன்ன என்று தெளிவாக எழுதியனுப்புமாறு கேட்டுத் தலைவரவர்கள் கடிதமெழுதவேண்டுமென்றும், நமது சென்னை ஏஜண்டுமீது குற்றம் சுமத்திப்பத்திரிகையில் வெளியிடுவதற்குமுன் நமது கழகத்தைக் கேட்டுத்தெரிந்து கொள்ளாததுபற்றி இக்கழகம் வருந்துகிறதென்றும் சர்வ சம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

(Sd) M. V. Nelliappa Pillai.
*President* 5-4-'36.

---

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்

Press Letter No. 371　　　　கீழரதவீதி,
To　　　　திருநெல்வேலி 5-4-'36.

திருவாளர்,
ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம்,
22-A, கல்லுக்காரத்தெரு, மயிலாப்பூர்,
சென்னை.

அன்பார்ந்த ஐயா,

இன்று கழக நிறைவேற்றுக் கூட்டத்தில் நடந்த 2-வது தீர்மானத்தின் நகலை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அன்புகூர்ந்து பெற்றுக்கொண்டதற்கு விடை யளிக்கவேண்டுகிறேன்.

அன்புள்ள
(Sd.) வ. திருவரங்கம் பிள்ளை
அமைச்சர் 5-4-'36.

---

Press Letter No. 372

To

திருவாளர்,
ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம்,
22-A, கல்லுக்காரத்தெரு, சென்னை.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 'சித்தாந்தம்' மலர்-9 இதழ் 3-ல் எங்கள் சென்னை ஏஜண்டு திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்களைக்

குற்றம் சாட்டி எழுதியிருக்கிறீர்கள். அவ்வாறு எழுதுவதற்குமுன் தங்கள் சமாஜத்தோடு தொடர்புடைய எங்களுக்கு அதுபற்றி எழுதியிருந்தால் நலமாயிருந்திருக்கும். தங்கள் கட்டுரையிலிருந்து எங்கள் ஏஜண்டு என்ன குற்றம் செய்தாரென்று நாங்கள் அறிந்து கொள்ளக்கூடவில்லை. ஆதலின் எங்கள் ஏஜண்டு என்ன குற்றம் செய்தாரென்று தெளிவாக எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
(Sd.) M. V. Nelliappa Pillai,
*President.*

---

## THE SAIVA SIDDHANTHA MAHA SAMAJAM

22-A, கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர், Madras. 17-4-'36.

சைவத்திருவாளர்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் பி.எ.,
தலைவர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி.

அன்புமிக்க ஐயா,

தாங்களும் கழக அமைச்சரும் 5-4-'36-ல் அனுப்பிய கடிதங்களும் கழக நிறைவேற்றக்கூட்ட நடவடிக்கைகளும் கிடைத்தன. தங்கள் தீர்மானத்தின் காரணம் விளங்கவில்லை. "சென்னை சைவசித்தாந்த மகா சமாஜக் காரியதரிசியவர்கட்கு சென்னை ஏஜண்டு அவர்கள் செய்த குற்றம் இன்ன என்று தெளிவாக எழுதியனுப்புமாறு" தங்கள் தீர்மானம் கேட்கிறது. சித்தாந்தத்தில் (௧௦௪—௧௧௨ பக்கங்களில்) வெளிவந்துள்ள கட்டுரையைப் பலமுறை வாசித்துப் பார்த்தும் எனக்குத் தங்கள் ஏஜெண்டு குற்றம் செய்ததாக எழுதியுள்ள பகுதி யொன்றும் தோன்றவில்லை. எழுதப்படாததொன்றை எவ்வாறு தெளிவாக எழுதியனுப்புவதென்பது விளங்கவில்லை.

சமாஜம், சமாஜ வெளியீடுகள் விஷயத்தில் தங்கள் ஏஜெண்டு செய்து வருவதைப்பற்றி அக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தங்கள் கழக நிறைவேற்றக்கூட்டம் ஆக்ஷேபிக்காதது மகிழ்ச்சியைத் தருகிறது.

இங்ஙனம், தங்களன்புள்ள,
(Sd.) ம. பாலசுப்பிரமணியம்,
காரியதரிசி.

---



சர் டி. என். சிவஞானம் பிள்ளை, பி.ஏ.

## திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

1936-ம் ஆண்டு மேமாதம் 31-ம் தேதி, 1111-ம் ஆண்டு வைகாசிமீ 18-ம் நாள், ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்குக் கீழரதவீதி கழகமேடையிற் கூடிய நிறைவேற்றற் கூட்ட நடபடிக்கைகள்.

### வந்திருந்தவர்கள்

(1) திருவாளர். பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள்
(2) ,, M. V. நெல்லையப்ப பிள்ளை ,,
(3) ,, ந. சிவகுருநாத பிள்ளை ,,
(4) ,, வ. திருவரங்கம் பிள்ளை ,,
(5) ,, S. T. பொன்னம்பலநாத முதலியார் ,,

### தீர்மானங்கள்

(6) 5-4-'36 தீர்மானப்படி சென்னை சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி அவர்கட்கு எழுதியனுப்பிய கடிதத்திற்கு, அவர்கள் 17-4-36-ல் எழுதியனுப்பிய மறுமொழி வாசிக்கலாயிற்று. அவர்கள் மறுமொழியில் சென்னை "தங்கள் ஏஜண்டு குற்றம் செய்ததாக எழுதியுள்ள பகுதியொன்றும் தோன்றவில்லை" என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, நமது கழக 5-4-'36 தீர்மானத்தையும், அதன்பேரில் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தையும் "செந்தமிழ்ச் செல்வி"யில் வெளியிடுவதல்லாமல் சித்தாந்தத்திலும் வெளியிடவேண்டுமென்றும், ஷை பத்திராசிரியரவர்களை அமைச்சர் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் சர்வ சம்மதமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

(Sd) M. V. நெல்லையப்ப பிள்ளை,
தலைவர். 31-5-'36.

---

திருவாளர். ஸர். டி. என். சிவஞானம் பிள்ளையவர்கள் சென்ற 13—6—36 சனிக்கிழமையன்று உயிர் துறந்தமை பெரிதும் வருந்தத் தக்கதாகும். ஆரவாரமும் ஆடம்பரமுமில்லாமல் தன் பணியாற்றி மேனிலை யெய்திய ஒரு சிலருள் பிள்ளையவர்கள் தலைசிறந்தவராவார். ரெவினியூ செக்ரட்டேரியட் உதவி ரெஜிஸ்ட்ராராக விருந்து பின் டிப்டிகலெக்டர் பதவிவகித்து உதவிச்சம்பளம் பெற்றார். அதன்பின் சென்னைசட்டச்பை உறுப்பினராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவராகவுமிருந்தார். அதன்பின் 1923—26 வரை சென்னை அரசாங்க வளர்ச்சி நெறியமைச்சராக இருந்துவந்

தார். எங்கள் கழகச் சார்பில் நடைபெறும் தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தலைவராக அதன் துவக்க முதல் இருந்து வந்தமையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. உண்மைக்கும் பயன் கருதா உழைப்பிற்கும் உறைவிடமாயிருந்த திரு. பிள்ளையவர்கள் பிரிவாற்றுமையால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு எம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## மதிப்புரை

**கலைச் சொற்கள்:**—திருநெல்வேலியிலுள்ள சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையைப் பிறிதொரு பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். சான்றோரும் ஆராய்ச்சியறிஞரும் நிறைந்துள்ள அச்சங்கத்தினரால் பூதநூல், இயைபுநூல், கணிதம், இயற்கை, உடலியல், நலவழி, தரைநூல், வரலாறு முதலிய துறைகளுக்குத் தமிழ்க் கலைச்சொற்கள் ஆக்கப்பட்டு அவை நூல் வடிவமாக அச்சிடப்பட்டு அறிஞர்தம் திருத்தத்திற்காக வெளியிடப்பட்டுள்ளன. செயற்கரிய பெருஞ்செயலை முடித்துள்ள சங்கத்தாரின் நோக்கம் நிறைவேறித் தமிழ்மொழி பெருநலம் பெறுமாறு ஏற்ற உதவி புரிதல் தமிழ்மக்கள் ஒவ்வொருவருடைய கடனுமாகும். இத்துறையிற் பெரிதும் ஈடுபட்டு இடைவிடா துழைத்துவரும் திருவாளர்கள் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், சாமி வேலாயுதம் பிள்ளை அவர்கள் ஆகிய இருவருடைய பொதுநல மொழித்தொண்டு பாராட்டற்பாற்று. நூலின் விலை அணு எட்டு.

**திருத்தொண்டர் புராணம்:**—கோவைத்தமிழ்ச்சங்க வெளியீடாக திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் வெளியிட்டுவரும் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தின் மூன்றுவது சஞ்சிகை எம்பார்வைக்கு வந்துள்ளது. வியக்கத்தக்க புது உண்மைகளுடனும் படங்களுடனும் வெளிவந்துள்ள இந்நூல் ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படித்தற்குரியதாகும். சுந்தரரின் முதல் யாத்திரைப் படம் இதன்கண் வரைந்து சேர்க்கப்பட்டுள்ளது. பண்டைப்பெரு நூலொன்றிற்கு இன்றைய தேர்ந்த முறையில் உரையெழுதி வரும் சைவப்பெரியாரான திரு. முதலியாரவர்கள் முயற்சி தமிழுலகுக்கே திருவினையாக்கும் என்று கூறலாம். இதன் விலை ரூ. 1. கோவைத் தமிழ்ச்சங்கம், வைசியாள் வீதி, கோயமுத்தூர் என்ற முகவரிக்கெழுதிப் பெற்றுக்கொள்க.

S24



சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ரீடராயிருந்து ஒய்வுபெற்ற
**திருவாளர். S. அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள்,**
**எம்.ஏ., எல்.டி.**